REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜூன் 10 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

1932 - 2022

வரு. 90 இல. 135 | Friday 10, June, 2022 | 16பக்கங்கள் | 40/-


**அரச நிதிக் குழு தலைவர் நியமனம்:**

## பாராளுமன்றத்தில் நேற்று பெரும் சர்ச்சை



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

அரச நிதி தொடர்பான குழுவின் தலைவராக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே நியமிக்கப்பட வேண்டுமென லக்ஷ்மன் கிரியெல்ல எம். பி நேற்று சபையில் முன்வைத்த கோரிக்கையையடுத்து சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

06

## துறைமுகங்கள் மீதான சர்வதேச நம்பிக்கையை உறுதிப்படுத்தவும்

**துறைமுக அதிகாரிகளிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு**



**விமான நிலையத்தை நவீனமயப்படுத்தவும் ஆலோசனை வழங்கல்**

நவீன தொழிநுட்பத்தினூடாக வினைத்திறனான சேவையை வழங்கி இலங்கை துறைமுகங்கள் மீதான சர்வதேச நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு

06

**கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில்**

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று சரணடைந்தார்



**பிணையில் விடுதலை; வெளிநாடு செல்லத் தடை**

பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் நேற்று சரணடைந்தார்.

நேற்று இரவு 08 மணிக்கு முன்னர் அவர் சரணடைய வேண்டுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையிலேயே அவர் இவ்வாறு சரணடைத்துள்ளார். அவரை பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றம் வெளிநாடு செல்லவும்

06

## நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பே இல்லை

**எவரும் அச்சமடைய வேண்டாம் என்கிறார் அமரவீர**

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



**இறக்குமதியாகும் அரிசி ச.தொ.சவில் ரூ.200க்கும் குறைவான விலையில்**

நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுமென்று எவரும் பயப்படத் தேவையில்லை. போதியளவு அரிசி கையிருப்பு உள்ளதுடன் இந்த மாதத்தில் மேலும் 65,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

**MP பதவி மற்றும் அரசிலிருந்து விலகியிருந்தாலும்**

# அரசியல் செயற்பாடுகளை நிறுத்தப் போவதில்லை

**பதவி விலகுவதை அறிவித்த பின் பசில் சூளுரை**

**21 ஆவது திருத்தத்துக்கு தனிப்பட்ட முறையில் விருப்பமில்லை எனினும் இரட்டை குடியுரிமை பிரச்சினைகள் எழு முன்னரேயே பதவி விலக முன்வந்ததாகவும் தெரிவிப்பு**

தனிப்பட்ட முறையில் 21ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை தான் விரும்பாத போதிலும், இரட்டை குடியுரிமை பிரச்சினைகள் எழுவதற்கு முன்னரே தான் பதவி விலகுவதாக முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நிதி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ, நேற்று (09) கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் அரசாங்கத்திலிருந்தும் விலகினாலும் தனது அரசியல் நடவடிக்கைகளை நிறுத்தப் போவதில்லையென்றும் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, இந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பு

06



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் சீன உயர்ஸ்தானிகர்களுக்கிடையிலான சந்திப்பு கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. இதன்போது இந்திய உயர்ஸ்தானிகர், கோபால் பாக்லே ஜனாதிபதியை சந்தித்து உரையாடியபோது....



**வடக்கின் மின் உற்பத்தி இலாபம் வடக்கு அபிவிருத்திக்கு வழங்க வேண்டும்**

உறுதி செய்யுமாறு சித்தார்த்தன் எம்பி சபையில் வலியுறுத்து

03

## எம்.பி பதவியிலிருந்து பசில் இராஜினாமா



**விலகல் கடிதத்தையும் கையளித்தார்**

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தான் விலகியுள்ளதாக முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தனது பதவி விலகல் கடிதத்தை, பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானத்துக்கமைய, கடந்த 2021 ஜூலை 7 ஆம் திகதி நான் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதுடன், ஜனாதிபதியினால் நிதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டேன்.

06

**இலங்கை மின்சார திருத்த சட்டமூலம்:**

## 84 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றம்



**ஆதரவாக 120 ; எதிராக 36 மட்டுமே**

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் 84 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. சட்டமூலத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 36 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 13 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அதனையடுத்து சட்ட மூலம்

06

**சுகாதார அமைச்சின் விசேட அறிவிப்பு:**

## இன்று முதல் முகக்கவசம் அணிய அவசியமில்லை

**PCR, அன்டிஜன் சோதனைகளும் தேவையில்லை**



நாட்டில் முகக்கவசம் அணிதல், PCR அல்லது ரெபிட் அன்டிஜன் சோதனை மேற்கொள்வது இன்று முதல் கட்டாயமில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் சுகாதார சேவைகள்

06

## அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் கைது

**நுகர்வோர் அதிகாரசபை எச்சரிக்கை**

நிர்ணயிக்கப்பட்ட சந்தை விலைக்கு மேல் அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை கைது செய்யும் நடவடிக்கையை நாடளாவிய ரீதியில் இலங்கை நுகர்வோர் அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

அண்மையில் 12 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், உள்ளூர் சந்தையில் அதிக பட்ச சில்லறை விலைக்கு மேல் அரிசி

06

**அரசியலில் மாற்று சக்தியாக விளங்கும் எனும்**

# எனது எதிர்பார்ப்புகளை SJB நிறைவேற்றவில்லை



**கவலையுடன் வெளியேறுவதாக சம்பிக்க தெரிவிப்பு**

மாற்று சக்தியாக ஐக்கிய மக்கள் சக்தி விளங்கும் என்ற தனது எதிர்பார்ப்புகளை ஐக்கிய மக்கள் சக்தி நிறை வேற்றவில்லை என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலும் காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக மாற்றுசக்தியொன்றிற்கான தேவை

06

Gas, எரிபொருள் வரிசைகளில் மோதல்:

## நாட்டில் உணவுக்காகவும் கலவரங்கள் வெடிக்கலாம்

**மனோ கணேசன் எம்.பி ஆரூடம்**




உணவுக்காக இலங்கையில் இன்னமும் பெரிதாக கலவரம் ஏற்படவில்லை. ஆனால், அதற்கான சூழல் விரைவாக ஏற்பட்டு வருகிறது என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். பெற்றோல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு போன்றவற்றுக்காக மக்கள் மோதிக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள் எனவும்

06

## யானை மிதித்து 04 மாத ஆண் குழந்தை பலி

**தாய் படுகாயம்; திருக்கோவிலில் சோகம்**

**ஒலுவில் விசேட நிருபர்**



ஒலுவில் அஷ்ரப் நகர் பிரதேசத்தில் 04 மாத ஆண் குழந்தையொன்று யானை மிதித்து உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் புதன்கிழமை (08)

06

## இ. மி. ச பொறியியலாளர் சங்கத்துக்கு 14 நாள் தடை

**தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது**



இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அணில் ரஞ்சித் இந்துவர, செயலாளர் தம்மிக்க விமலரத்ன ஆகியோர், எதிர்வரும் 14 நாட்களுக்கு தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி பூர்ணிமா பரணகம இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

06

**அவுஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக**

## குடியேற முயன்ற பதினைந்து இலங்கையர் நாடு கடத்தல்

**நேற்று விமான நிலையத்தில் CIDயினரால் கைது**



கடல் வழியாக சட்டவிரோதமாக குடியேறிய குற்றச்சாட்டில் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட 15 இலங்கையர்கள் நேற்று மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.

06

## மின்சார சேவை அத்தியாவசியமானது



**அதிவிசேட வர்த்தமானி வெளியானது**

மின்சார விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் அந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் மக்கள் அண்மைக்காலமாக

06

## கதிர்காமத்தில் இளம் தம்பதி விபத்தில் பலி

**ட்ரக்டர் – மோ.சைக்கிள் மோதி சம்பவம்**

கதிர்காமம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளம் ஜோடி ஒன்று பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கதிர்காமம் கஹடிட்டிய வீதியில் மோட்டார் சைக்கிள் உழவு இயந்திரத்துடன் மோதியதில் இந்த இளம் ஜோடி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

06

## திரிபோஷா தட்டுப்பாடு; கர்ப்பிணிகள் பாதிப்பு

**சோள விளைச்சல் இன்மை காரணமாம்**



கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட வேண்டிய திரிபோஷா கையிருப்பில் இல்லை என சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் சித்ரமாலி டி சொய்சா தெரிவித்துள்ளார். கடந்த நவம்பர் மாதம் முதல் திரிபோஷாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், சோள விளைச்சல்

06

**வடக்கு கிழக்கில் வீடுகள் அமைப்பு தொடர்பில்**

## சாணக்கியன்- அமைச்சர் பிரசன்ன பாராளுமன்றத்தில் வாக்குவாதம்





வடக்கு கிழக்கில், நல்லாட்சி அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணித்து தரவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம் சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இது தொடர்பில் கேள்வி எழுப்பிய அவர், நல்லாட்சி அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை, தாம் பூர்த்தி செய்யமுடியாது என்று அரசாங்கத்தின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளதாகவும் சாணக்கியன் எம்.பி குறிப்பிட்டார்.

06

## மின்சாரம் தடைப்பட்டமை நாசகார வேலையே

**PUCSL தலைவர் ஜானக சாடல்**

நாட்டின் பல பகுதிகளில் நேற்று அதிகாலை மின்சாரம் தடைப்பட்டமை, நாசகார வேலையாகவே கருத முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் தமது சிறப்புரிமைகளை தவறாகப் பயன்படுத்துகின்றதாகவும் அவர் சாடியுள்ளார்.

பொது மக்களுக்கு

06

# சர்வதேச செய்திகள்

## டெக்சஸ் துப்பாக்கிச் சூட்டில் இறந்தது போல் நடித்த சிறுமி



அமெரிக்காவின் டெக்சஸ் மாநிலத்தின் பாலர் பாடசாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலின் போது உயிரிழந்த நண்பரின் இரத்தத்தைத் தன் மீது பூசிக்கொண்டு இறந்துவிட்டதுபோல் நடித்ததாகச் சிறுமி ஒருவர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நான்காம் வகுப்பு பயிலும் 11 வயது மியா செர்ரிலோ, கடந்த மாதம் நடந்த தாக்குதலைப் பற்றி ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட வீடியோவில் விவரித்தார்.

அவரின் வகுப்பு, படம் பார்த்துக் கொண்டிருந்தபோது துப்பாக்கிதாரி வகுப்பறைக்குள் வந்ததாக மியா கூறினார்.

“அவர் எனது ஆசிரியரிடம் ‘குட் நைட்’ என்று கூறிவிட்டு தலையில் சுட்டார். பின், வகுப்பில் இருந்த சில மாணவர்களையும் வெள்ளைப் பலகையையும் சுட்டார்.

என் அருகில் இருந்த நண்பரைச் சுட்டார். துப்பாக்கிதாரி மீண்டும் அறைக்கு வருவார் என்று எண்ணி சிறிது ரத்தத்தை எடுத்து என் மீது பூசிக்கொண்டேன்” என்றார் மியா.

உயிரிழந்த ஆசிரியரின் தொலைபேசியை எடுத்து பொலிஸாருடன் தொடர்புகொண்டதாக அவர் குறிப்பிட்டார். அத்தகைய சம்பவம் மீண்டும் நடக்கக்கூடாது என்று மியா கூறினார்.

அவரின் அனுபவம் சிலரைக் கண்கலங்க வைத்தது.

தாக்குதல் நடந்துகொண்டிருந்தபோது சுமார் 12 பொலிஸ் அதிகாரிகள் எதுவும் செய்யாமல் வகுப்புக்கு வெளியே நின்றுகொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அதை அடுத்து அவ்வட்டாரப் பொலிஸ் தரப்பு பெரும் கண்டனத்திற்கு உள்ளானது.

## குரங்கம்மை அச்சுறுத்தல் பற்றி சுகாதார அமைப்பு எச்சரிக்கை



குரங்கம்மை நிரந்தர நோயாகக் கருதப்படாத நாடுகளில், அது அதிக அளவில் பரவும் அபாயம் உண்மையானது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுவரை அத்தகைய 29 நாடுகளில் சுமார் 1,000 குரங்கம்மைச் சம்பவங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

ஆனால் குரங்கம்மைத் தடுப்பூசியை அனைவரும் போட்டுக்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்போவதில்லை என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை பணிப்பாளர் டெட்ரோஸ் கெப்ரியேசஸ் கூறினார்.

அந்த 29 நாடுகளில் குரங்கம்மையால் யாரும் உயிரிழக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

குரங்கம்மை குறிப்பிட்ட காலத்துக்குக் கண்டறியப்படாமலேயே பரவியிருந்திருக்க வேண்டும். ஆனால் அது எவ்வளவு காலத்திற்கு அவ்வாறு பரவியிருக்கும் என்பது தெரியவில்லை என்று டெட்ரோஸ் கூறினார்.

மற்ற நாடுகளில் குரங்கம்மை பரவுவது அக்கறைக்குரிய ஒன்றாக இருந்தாலும், ஆபிரிக்க நாடுகளில் அது பல ஆண்டுகளாகப் பரவிவருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டு மட்டும் அங்கு 66 பேர் குரங்கம்மைத் தொற்றால் உயிரிழந்திருப்பதாக அவர் கூறினார்.

அங்கு சுமார் 1,400 குரங்கம்மைச் சம்பவங்கள் கண்டறியப்பட்டன.

குரங்கம்மைத் தொற்றுடன் தினமும் வாழும் சமூகங்களுக்கும் அதே அளவு அக்கறையும், அவர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான வளங்களும் வழங்கப்பட வேண்டும் என்றார் டெட்ரோஸ்.

## அரசின் சிவில் நிர்வாகத்தில் தலையிடும் பாகிஸ்தான் இராணுவம்



பாகிஸ்தானில் பதவியேற்ற எந்தவொரு பிரதமரும் தன் பதவிக் காலத்தை முழுமையாக பூர்த்திசெய்ததில்லை என்றும் அதேசமயம் எந்தவொரு இராணுவத் தளபதியும் அரசுகளோடு நேசபூர்வமான உறவுகளை கொண்டிருந்ததில்லை என்றும் ஒரு ஆய்வு தெரிவித்துள்ளது. இதன் இறுதிப் பலியாக இம்ரான்கான் ஆக்கப்பட்டிருப்பதாகவும் தற்போது ஆட்சிப் பொறுப்பில் உள்ள பிரதமர் ஷெபாஸ் ஷரீப் தலைமையிலான அரசும் இராணுவத்துடன் முரண்பட ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று தடவைகள் பிரதமராக பதவி வகித்த நவாஸ் ஷரீப், இரண்டு தடவைகள் பதவி வகித்த பெனாஷிர் பூட்டோ, முன்னாள் பிரதமர் யூசுப் ராஸா கிலானி ஆகியோரும் இராணுவ தலையீடுகளை எதிர்கொண்டிருந்ததாகவும் இராணுவம் நேரடியாக ஆட்சிப் பொறுப்பில் இல்லாத சமயங்களில் இந்த இடையூறுகள் மிகுந்திருந்ததாகவும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. கடந்தவாரம் உரையாற்றிய முன்னாள் பிரதமர் இம்ரான்கான், இராணுவம் தான் நடுநிலை வகிப்பதாகக் கூறினாலும் உண்மையான பலம் யாரிடமுள்ளது என்பது மக்களுக்குத் தெரியும் என்று குறிப்பிட்டிருந்தார்.

## உக்ரைனின் தானியங்களை விடுவிப்பதற்கு தீவிர முயற்சி



உக்ரைனியத் துறைமுகங்களில் சிக்கியிருக்கும் மில்லியன் கணக்கான தொன் தானியங்களை வெளியே கொண்டுவரும் முயற்சி தீவிரம் அடைந்துள்ளது.

ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுத்தபோது உக்ரைனின் கருங்கடல் துறைமுகங்களை அது மூடிவிட்டது.

அதன் காரணமாக உக்ரைனால் தானியங்களை ஏற்றுமதி செய்ய முடியவில்லை. துருக்கி நாட்டின் உதவியோடு ரஷ்யாவுடன் பேரம் பேச ஐக்கிய நாடுகள் சபை முயன்று வருகிறது. பொருளாதார தடைகளை நீக்கினால் தானியங்களை வெளியே கொண்டுவரலாம் என்று ரஷ்யா குறிப்பிடுகிறது.

தானியங்களை ஏற்றுமதி செய்யப் பாதை ஒன்றை ஏற்பாடு செய்தாலும் அதைப் பாதுகாப்பானதுதான் எனக் கப்பல் நிறுவனங்களும் காப்புறுதி நிறுவனங்களும் ஏற்றுக்கொள்வது சிரமம் என்று கூறப்படுகிறது.

உக்ரைனில் அடுத்த அறுவடைக் காலம் அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளது. அதற்குக் குறுகிய காலமே இருப்பதால் பல்வேறு முன்னேற்பாடுகளைச் செய்யப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

உலக கோதுமை விநியோகத்தில் ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகள் மூன்றில் ஒரு பங்கை வகிக்கிறது. இந்தியாவின் ஏற்றுமதித் தடை மற்றும் வட அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பாவில் பாதகமான காலநிலையால் பயிர் செய்கையில் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு ரஷ்யா மற்றும் உக்ரைனின் முக்கியத்துவத்தை காட்டுவதாக உள்ளது.

போருடன் மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது விதித்திருக்கும் தடைகள் காரணமாக தானியங்கள், சமையல் எண்ணெய் மற்றும் வலுசக்தி துறை யில் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது.

இது ஏழை நாடுகளில் பெரும் உணவு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சில நாடுகள் தமது கோதுமை இறக்குமதியில் பாதிக்கு அதிகமான பங்கை ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்தே இறக்குமதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## தமிழக நிவாரணப் பொதிகள் சாய்ந்தமருதில் விநியோகம்

கல்முனை விசேட நிருபர்



இந்திய உதவித் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டின் அன்பளிப்பாக வழங்கப்பட்ட உணவு நிவாரணப் பொதிகள் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (08) ஒரு தொகை பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியினால் நாளாந்த வருமானத்தை இழந்துள்ள குடும்பத்தினருக்கும் கணவனை இழந்த பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் அரிசி, பால்மா போன்றவை வழங்கப்பட்டிருக்கின்றன. சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் இந்நிவாரண உதவியைப் பெறுவதற்கு 1760 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தெரிவித்தார்.

### கல்முனை பிரதேசத்தில்

## போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோரால் அதிக விபத்துக்கள்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

கல்முனை பிரதேசத்தின் பிரதான வீதிகளில் தமக்குரிய வலது, இடது பக்கங்களில் பயணிக்காமல் பக்கம்மாறி பயணிப்பதால் அதிகமான வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருவதுடன் பலர் உபாதைக்கும் உள்ளாகியுள்ளனர்.

வாகனங்களில் பயணிக்கும் போது தமக்குரிய பக்கங்களை கவனித்தே பயணிகளும் வாகன சாரதிகளும் செயற்படுவது வழமையான விடயமாகும். ஆனால் துவிச்சக்கர வண்டி , மோட்டார் சைக்கிள் , ஏனைய வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் பக்கம் மாறி பயணித்து வருவதனால் எதிர்பாராதவிதமான விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

வீதி போக்குவரத்து பொலிஸார் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கூடுதலான விபத்துக்கள் குறுக்கு வீதிகள் பிரதான வீதியில் சந்திக்கும் இடத்திலேயே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### மட்டு. மாவட்டத்தில்

## 80 ஆயிரம் ஏக்கரில் சேதனப் பசளையில் சிறுபோக நெற்செய்கை

மட்டக்களப்பு குறூப் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் சேதனப் பசளை மூலம் சுமார் 80 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக வேளாண்மை செய்கை பண்ணப்பட்டிருப்பதாக அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கே.யோகவேள் தெரிவித்தார்.

சேதனப் பசளையை நம்பி செய்கை பண்ணப்பட்டுள்ள சிறுபோக வேளாண்மை நல்ல விளைச்சலைத் தந்துள்ளதாகவும் இரசாயன உரம் கிடைக்கும் பட்சத்தில் மேலும் நல்ல அறுவடையை எதிர்பார்க்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

அகில இலங்கை விவசாய சம்மேளனம் அண்மையில் விவாசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் நடாத்திய பேச்சு வார்த்தையின் போது இம்மாத இறுதிக்குள் இந்தியாவிலிருந்து இரசாயன பசளையை இறக்குமதி செய்து தருவதாகவும் உறுதியளித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

சேதனப் பசளை மூலம் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மையை அறுவடை செய்யும்போது ஒரு ஏக்கருக்கு 10 மூடை அறுவடையை எதிர்பார்த்தால் இரசாயன பசளை மூலம் செய்கை பண்ணப்படும் நெற்செய்கைக்கு ஒரு ஏக்கருக்கு 35 மூடைகளை அறுவடையாக எதிர்பார்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## கஹடகஸ்திகிலிய விபத்தில் பெண்ணொருவர் உயிரிழப்பு

றொட்டவெவ குறூப் நிருபர்

அனுராதபுரம்ஹொரவ்பொத்தானை பிரதான வீதி கஹடகஸ்திகிலிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.இவ்விபத்தில் ஹொரவ்பொத்தானைமுக்கறவெவ பகுதியைச் சேர்ந்த வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கெப் வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சிறார்கள் உட்பட 8 பேர் காயமடைந்த நிலையில் அனுராதபுர போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் இந்நிலையில் குறித்த பெண் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் தற்போது அனுராதபுரம் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## அரசியல் ஸ்திரத்தன்மை உடனடியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்

### TRF சிவில் சமூக வலையமைப்பு

திராய்கேணி நிருபர்

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடியினை குறைப்பதற்கு அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான பொதுவான கருத்துகள் மக்கள் எழுச்சி போராட்டங்களில் இருந்து வருகின்றன. இதனையே நாட்டு மக்களும், சிவில் சமூக அமைப்புகளும், சர்வதேச நாடுகளும் எதிர்பார்கின்றார்கள்.

21ஆவது அரசியல் யாப்பு திருத்தம் தொடர்பாக அம்பாறை மாவட்ட TRF சிவில் சமூக வலையமைப்பு காரைதீவிலுள்ள மாவட்ட அலுவலகத்தில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் வெளியிட்டுள்ள ஊடாக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடரும் அவ்வறிக்கையில்,

அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளும் 21ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தம் அவசரமாகவும், குறுகிய காலத்தில் கொண்டுவர வேண்டியுள்ளதை நாம் அனைவரும் அறிவோம். இவ் அரசியல் யாப்பு திருத்தமானது நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் பல்லினத்தன்மையுடன் கூடிய ஜனநாயக உரிமைகள் மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தக் கூடியதாகவும், சட்டம், நீதி, நிர்வாகம் சுதந்திரமாக இயங்கங் கூடியதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட விடயங்களை கருத்தில் கொண்டு சட்டத்தரணிகள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட 12 அம்ச கோரிக்கைகள் மற்றும் எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட 5 அம்ச கோரிக்கைகளை உள்ளடக்கி புதிய யாப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டால் அது நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்பதை அம்பாறை மாவட்டத்தில் செயற்படும் TRF சிவில் சமூக வலையமைப்பு எதிர்பார்கின்றது.



அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் விதாதா வள நிலையத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டமான ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு ஒரு கைத்தொழில் முயற்சியாளரை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இயந்திர சாதனங்கள் மற்றும் காசோலைகள் வழங்கும் நிகழ்வு பிரதே செயலகத்தில் நடைபெற்ற போது. (படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

தினகரன் விளம்பரம் 0112429367

விற்பனை பிரிவு 0112429444, 0112429378

ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஜுன் 10 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்




**தொழுகை நேரம்**

07 முதல் 10 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.31 |
| லுஹர் | 12.11 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.25 |
| இஷா | 07.42 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் வைகாசி 27

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை

சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: ஏகாதசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | பாராட்டு |
| ரிஷபம் | கோபம் |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | நிறைவு |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | செலவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# வடக்கின் மின் உற்பத்தி இலாபம் ; வடக்கு அபிவிருத்திக்கு வழங்க வேண்டும்

## உறுதி செய்யுமாறு சித்தார்த்தன் எம்பி சபையில் வலியுறுத்து



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

வடக்கில் நடைமுறைப்படுத்தப் படவுள்ள மின் உற்பத்தி திட்டங்களை எந்த நிறுவனத்துக்கு வழங்கினாலும் அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை வடக்கு அபிவிருத்திக்காக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி தர்மலிங்கம் சித்தார்த்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தியாவின் அதானி நிறுவனம் அல்லது வேறு எந்த நிறுவனத்திற்கு அது வழங்கப்பட்டாலும் அதன் மூலமான ஒப்பந்தத்தில் அது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார். பாராளுமன்றத்தில் நேற்று மின்சாரம் தொடர்பான திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

வடக்கில் மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை வரையான பிரதேசங்களில் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான இடங்கள் உள்ளதாக

06

# இந்தியாவிலிருந்து 65,000 மெ.தொன் யூரியா வருகிறது

## இறக்குமதி செய்த இரு தினங்களில் விவசாயிகளுக்கு கிடைக்கும்

ஜூலை முதல் இரண்டு வாரங்களுக்குள், இந்தியாவிடமிருந்து 65,000 மெட்ரிக் தொன் யூரியாவை இலங்கை பெறும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்களால் நிதியளிக்கப்படும் அமைச்சின் விவசாயத் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வில் உரையாற்றும் போதே இந்த அறிவிப்பை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர வெளியிட்டார்.

ஓமானிலிருந்து இந்தியாவின் பயன்பாட்டுக்காக கொள்வனவு செய்யப்பட்ட யூரியா உரமே விவசாயத் துறையிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக இலங்கைக்கு வழங்கப்படுகிறது. இறக்குமதி செய்த இரண்டு மூன்று நாட்களுக்குள் யூரியாவை விவசாயிகளுக்கு



06

# வடக்கு மக்களுக்கும் எரிபொருள் முறையாக கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சபையில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் முறையாக கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் அரசாங்க அதிபர்கள் மூலம் முறையான திட்டம் ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென செல்வம் அடைக்கலநாதன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மின்சாரம் தொடர்பான திருத்தச் சட்டமூல விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

வடக்கில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களுக்கும் விவசாயிகளுக்கும்,மீனவர்களுக்கும் எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் முறையாக கிடைப்பதில்லை. எந்த முறைமையின் மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள் கொண்டுவரப்பட்டாலும் பெருந்தொகை எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் வந்து சேர்ந்தாலும் அவை சில மணித்தியாலங்களில் விற்பனை செய்து முடிக்கப்படுகின்றன. அவற்றுக்கு என்ன நடக்கின்றது எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பது எனக்கு புரியவில்லை. ஆனால் எமது விவசாயிகளுக்கோ அல்லது மீனவர்களுக்கோ போதியளவு மண்ணெண்ணெய் அல்லது எரிபொருள் கிடைப்பதில்லை. அது தொடர்பில் அரசாங்கம் பிரதமரும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்திலும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகிறது. எமது மாவட்டத்திலேயே அதிகமாக படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். அவர்களால் எமது மக்களுக்கு என்ன பயன் என கூறமுடியாதுள்ளது என்றும் அவர் சபையில் மேலும் தெரிவித்தார்.

## ரூ.4,500 கோடி செலவில் கட்டப்பட்ட

# மீன்பிடி துறைமுகங்களின் செயற்பாடுகள் ஆரம்பம்

## அமைச்சர் டக்ளஸ் நேற்று ஆரம்பித்து வைத்தார்

கலமிட்டிய மற்றும் வெல்லமன்கர ஆகிய இடங்களில் சுமார் 4,500 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள் இரண்டின் செயற்பாடுகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

செலவினங்களை கட்டுப்படுத்தும் நோக்கிலான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தீர்மானத்துக்கமைய, கடற்றொழில் அமைச்சில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திடம், இரண்டு துறைமுகங்களும் கடற்றொழில் அமைச்சரினால் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைக்கப்பட்டன.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

"சுமார் 500 இற்கும் மேற்பட்ட ஆழ்கடல் மீன்பிடிக் படகுகளையும் 300 இற்கும் மேற்பட்ட ஒருநாள் மீன்பிடிப் படகுகளையும் செயற்படுத்தும் வகையில் ஹம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் அந்தப் பிரதேசங்களில் ஏராளமான தொழில் வாய்ப்புக்களையும் பொருளாதார நன்மைகளையும் ஏற்படுத்தவுள்ளன. இவ்வாறான துறைமுகங்களை வட மாகாணத்தில் பருத்தித்துறை, பேசாலை, குருநகர் ஆகிய இடங்களிலும் உருவாக்குவதற்கான

06



# கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்கள் விரைவில் நிறைவு செய்யப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களை நிறைவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு என மக்களை அரசாங்கம் பிரித்துப் பார்ப்பதில்லை என்றும் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையை ஒருபோதும் அரசாங்கம் மேற்கொள்ளாது எனவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்க காலத்தை விட எமது அரசாங்கத்தின் காலத்திலேயே வடக்கு கிழக்கில் அதிக அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று கிழக்கில் வீடமைப்புத் திட்டங்களில் நிலவும் குறைபாடு தொடர்பில் இராசமாணிக்கம் சாணக்கியன் எம் பி எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர், கிழக்கில் நிறைவு செய்யப்படாமல் உள்ள வீட்டுத் திட்டங்களை நிறைவு செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

கடநத அரசாங்கத்தின் 5வருட காலத்தையும்விட அதிக வீடுகளை நாம் கடந்த இரண்டு வருடங்களில் வடக்கு கிழக்கிற்கு நிர்மாணித்து வழங்கியுள்ளோம்.

வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்காக அரசாங்கம் ஒரு லட்சம் ரூபாய் மாத்திரமே வழங்கியுள்ளதாக சாணக்கியன் எம்.பி சபையில் தெரிவித்தார்.அது முற்றிலும் தவறு. 6 இலட்சத்திற்கும் அதிகமான நிதி அதற்காக வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கில் நிறைவு செய்யப்படாத வீடுகளை

06

## கிழக்கில் நல்லாட்சி அரசில் ஆரம்பித்த வீட்டுத்திட்டங்கள்:

# நிறைவு செய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சபையில் சாணக்கியன் எம்பி வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களை நிறைவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி இராசமாணிக்கம் சாணக்கியன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டமையால் அரசியல் பழிவாங்கும் வகையில் தற்போதைய அரசாங்கம் அதனை கைவிட்டுள்ளதாக சபையில் தெரிவித்த அவர், உடனடியாக அந்த வீட்டுத் திட்டங்களை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சரிடம் நேற்று சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் கேள்வியொன்றை எழுப்பிய அவர், அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

நல்லாட்சி அரசாங்க காலத்தில் வடக்கு, கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்ய முடியாமல் போன ஆயிரக்கணக்கான வீடுகள் இன்றும் அவ்வாறே காணப்படுகின்றன.அரசாங்கம் இந்த வீடுகளை பூரணப்படுத்தாமல் இருப்பது அரசியல் பழிவாங்கலாகும். எனவே பூரணப்படுத்தாமல்



06

# மின் தடை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்!

## இலங்கை மின்சார சபை தெரிவிப்பு

நாட்டின் நேற்று (09) அதிகாலை பல பகுதிகளில் ஏற்பட்ட மின் தடைக்கான காரணம் குறித்து இலங்கை மின்சார சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கம்பஹா, கொழும்பு, கண்டி மாவட்டங்கள் மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் அதிகாலை 5.00 மணி முதல் சுமார் 3 மணித்தியாலங்கள் மின் தடை ஏற்பட்டது. இதேவேளை, இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் ஆரம்பிக்கவிருந்த பணிப் புறக்கணிப்பு போராட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இடைநிறுத்தியது.

## மே 09 தாக்குதல் சம்பவம் தொடர்பில்

# தென்னகோனின் வகிபாகம் குறித்து விசாரிக்க உத்தரவு

## DIGக்கு பாதுகாப்பு அமைச்சு பணிப்பு



காலி முகத்திடலில் மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் தொடர்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எழுத்து மூலம் பணிப்புரை விடுத்துள்ளார். சட்ட மா அதிபரின் பணிப்புரையின் பேரிலேயே இந்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

06

## மின்சார திருத்த சட்டமூலம் தொடர்பில்

# தொழிற்சங்கங்கள் இடையூறு செய்தாலும் பின்வாங்க மாட்டேன்

## சபையில் மின்சக்தி அமைச்சர் சூளுரை



இச்சட்டத்துக்கும் அதானி நிறுவனத்துக்கும் தொடர்புமில்லை எனவும் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

மின்சார சபை திருத்தச் சட்டமூலம் தொடர்பில் இந்திய அதானி நிறுவனத்துக்கு எந்த தொடர்பும் கிடையாது. இந்த

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 255.52 | 266.96 |
| கனடியன் டொலர் | 280.59 | 291.86 |
| யூரோ | 383.09 | 393.95 |
| ஜப்பான் யென் | 2.7258 | 2.8339 |
| சிங்கப்பூர் டொலர் | 258.78 | 267.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 445.19 | 460.70 |
| சுவிஸ் பிராங்க் | 369.45 | 383.41 |
| அமெரிக்க டொலர் | 355.31 | 365.28 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 955.66 | கட்டார் ரியால் | 98.64 |
| குவைத் டினார் | 1,177.52 | சவூதி ரியால் | 96.05 |
| ஓமான் ரியால் | 935.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.09 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 09

## குறள் தரும் சிந்தனை

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்

காரணத்தைத் தெளிவாக அறிந்து ஒன்றைச் சொல்ல வேண்டும். அந்தச் சொல் வன்மையைப் போன்ற அறமும், உண்மைப் பொருளும் வேறெதுவும் இல்லை.

# இந்தியாவின் நல்லெண்ணத்தை களங்கப்படுத்தும் கண்டனங்கள்!

தென்னிலங்கை அரசியலில் கச்சதீவு விவகாரம் தற்போது சூடுபிடித்துள்ளது. இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீண்டும் மீட்டெடுத்துக் கொள்வதற்கு இந்தியா முயற்சி மேற்கொள்வதாக தென்னிலங்கையில் உள்ள அரசியல் தரப்புகளும் பல்வேறு அமைப்புகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் முக்கியஸ்தர்கள் சிலரும் இதேவிதமான குற்றச்சாட்டை சுமத்தி வருகின்றார்கள். இலங்கையின் நெருக்கடியை இந்தியா தனக்கு சாதகமாகப் பயன்படுத்தியபடி கச்சதீவை மீட்டெடுப்பதற்கு மறைமுகமாக முயற்சி மேற்கொண்டு வருவதாக தென்னிலங்கையில் கண்டனங்கள் முன்வைக்கப்படுகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு எதிராகவும் இக்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

பொருளாதார நெருக்கடியினால் அல்லலுறுகின்ற இலங்கை மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பி விட்டு, அதற்குப் பதிலீடாக கச்சதீவை மீட்டுக் கொள்வதற்கு தமிழ்நாடு ஆளும் தரப்பினர் முற்படுவதாக அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். இக்குற்றச்சாட்டுகளை தென்னிலங்கை அரசியல்வாதிகள் மாத்திரமன்றி, யாழ்குடாநாட்டில் உள்ள மீனவ அமைப்புகள் சிலவும் முன்வைத்து வருகின்றன.

வடமாகாண சபையின் முன்னாள் அவைத்தலைவரான சீ.வீ.கே. சிவஞானமும் தமிழக முதலமைச்சருக்கு கச்சதீவு விவகாரத்தை ஒரு வேண்டுகோளாக சில தினங்களுக்கு முன்னர் முன்வைத்திருந்தார்.

உலகத் தமிழர்களின் தலைவராகக் கருதப்படுகின்ற தமிழக முதலமைச்சர், கச்சதீவை மீளக்கோரும் விடயத்தை கைவிட வேண்டும் என்று சிவஞானம் கூறியிருந்தார். "முதலமைச்சர் ஸ்டாலினைப் பொறுத்தவரை தமிழ்நாட்டுத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் ஒன்றாகவே கருதப்பட வேண்டியவர்களாவர். எனவே வடபகுதித் தமிழர்களுக்கு பாதகமாக இருக்கப் போகின்ற கச்சதீவு விவகாரத்தை முதலமைச்சர் ஸ்டாலின் உடனடியாக கைவிட வேண்டும்" என்று சிவஞானம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இவ்வாறாக கச்சதீவு விவகாரமானது இலங்கையின் அரசியல் களத்தில் தற்போது பேசுபொருளாக உருவாகியுள்ளது. அதேவேளை இந்திய ஆளும் கட்சியான பா.ஜ.கவின் தமிழ்நாட்டுத் தலைவரான அண்ணாமலை சமீபத்தில் இலங்கைக்கு வருகை தந்து சென்றதையும் கச்சதீவு விவகாரத்துடன் முடிச்சுப் போடுவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் முற்படுவதைக் காண முடிகின்றது.

கச்சதீவை நீண்ட காலக் குத்தகைக்கு எடுத்துக் கொள்வதற்கு இந்தியா முற்படுவதாகவும், அதன் ஒரு அங்கமாகவே அண்ணாமலையின் இலங்கை விஜயம் அமைந்திருந்ததாகவும் தென்னிலங்கையில் உள்ள சில அமைப்புகள் குற்றம்சாட்டி இருந்ததையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டியுள்ளது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்டுக் கொள்கின்ற யோசனையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கம் எந்த ஒரு இடத்திலுமே குறிப்பிடவில்லை. அதுமாத்திரமன்றி இலங்கைக்கு அனைத்து வழிகளிலும் உதவிகளை வழங்கி வருவதற்கு இந்தியா இதுவரை எந்தவொரு நிபந்தனையையுமே முன்வைத்ததுமில்லை. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையானது தனது மிக நெருங்கிய நட்புறவு நாடென்ற ரீதியிலேயே இந்தியா தொடர்ச்சியாக பலவிதமான உதவிகளையும் வழங்கி வருகிறது.

கொவிட் பெருந்தொற்று இலங்கையில் தீவிரமடைந்திருந்த வேளையில் இந்தியா இலவசமாகவே தடுப்பூசிகளை வழங்கியிருந்தது. அதேபோன்று இன்றைய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்காக உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், எரிபொருள் போன்றவற்றையெல்லாம் இலவசமாகவும் நீண்டகால கடன் அடிப்படையிலும் இந்தியா தொடர்ந்தும் வழங்கிக் கொண்டிருக்கிறது.

நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு கைகொடுத்து உதவுவது இந்தியாவின் இன்றைய கடமையென்று பிரதமர் நரேந்திரமோடி பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுதிப்படத் தெரிவித்திருக்கின்றார். தமிழ்நாட்டின் ஆளும்கட்சியான திராவிட முன்னேற்றக் களகத்தின் நிலைப்பாடும் இதுவேயாகும்.

இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்ற யோசனை முன்னெழுந்த போது, முதலமைச்சர் ஸ்டாலின் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளை இலங்கையர்கள் எக்காலத்திலும் மறந்துவிட முடியாது. இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி, அனைத்து இன மக்களுக்காகவுமே தமிழ்நாடு முதலமைச்சரின் ஏற்பாட்டில் துயர்துடைப்பு நிவாரணங்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிவாரணத்துக்காக தமிழ்நாட்டு மக்கள் மனமுவந்து நிவாரணப் பொருட்களை கையளித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. எனவே இந்திய உதவிகளை கொச்சைப்படுத்தும் விதத்தில் இலங்கையில் இருந்து கச்சதீவு விவகாரம் சர்ச்சையாக முன்வைக்கப்படுவது நல்லதல்ல.

இலங்கைக் கடல் எல்லைக்குள் ஊடுருவுகின்ற இந்திய மீனவர்களாலும் தமிழக அரசியல்வாதிகளாலும் கச்சதீவுக்கு உரிமை கோரும் விவகாரம் அக்காலம் தொடக்கமே முன்வைக்கப்படுகிறது. அவற்றையெல்லாம் இந்தியாவின் நிவாரண உதவிகளுடன் முடிச்சுப் போடுவது தவறாகும்.

editor.tkn@lakehouse.lk

# அநுராதபுரத்தில் கடந்த ஐந்து மாத காலத்தில் எச்.ஐ.வி தொற்றாளர்கள் 13 பேர் அடையாளம்!

இந்த வருடத்தின் கடந்த ஐந்து மாதங்களில் மாத்திரம் அநுராதபுரம் மாவட்டத்தில் இருந்து எச்.ஐ.வி/எய்ட்ஸ் வைரஸ் தொற்று மூலம் பாதிக்கப்பட்ட 13 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பாலியல் நோய்கள் தொடர்பான சுகாதார சேவைகளுக்கான நிலையத்தின் வைத்திய அதிகாரி ஹேமா வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

எய்ட்ஸ் தொற்று ஏற்படுவதற்கு பாதுகாப்பற்ற பாலுறவு முக்கிய காரணம் என்று திருமதி வீரக்கோன் இது பற்றிய கலந்துரையாடலில் வலியுறுத்தியுள்ளார். அநுராதபுரம் மாவட்டத்தின் கஹட்டகஸ்திகிலிய, தம்புத்தேகம, ஹொரவப்பொத்தான, அநுராதபுரம் மத்திய நுவரகம்பளாத்த மற்றும் மெதவச்சிய ஆகிய பகுதிகளிலேயே தொற்றுக்குள்ளான பலர் காணப்படுகின்றனர்.

சமீபத்திய ஆண்டுகளில் அநுராதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ள எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், 2022 இன் முதல் 5 மாதங்களில் 13 பேர் பதிவாகியுள்ளனர்.



இது பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எனலாம்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் இருந்து எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான முதலாவது நபர் பதிவாகியிருந்தார். அதன் பின்னர் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட எச்.ஐ.வி தொற்றினால் 2020 ஆம் ஆண்டில் மாத்திரம் 15 நோயாளர்கள் இனங்காணப்பட்டதன் மூலம் அதிகூடிய நோயாளர்கள் பதிவாகியிருந்தனர் என வைத்திய அதிகாரி ஹேமா வீரக்கோன் இது பற்றி தகவல் தெரிவித்தார்.

இதுவரை அநுராதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ள மொத்த எச்.ஐ.வி தொற்றாளர்களில் சுமார் 10% வீதமானோர் மரணமடைகின்றனர்.

எச்.ஐ.வி நோயை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிப்பதன் மூலம் மக்கள் சிகிச்சைகளுடன் வாழ முடியும்.

ஆனால், எச்.ஐ.வி பற்றிய பரிசோதனை செய்வதில் பலர் ஆர்வம் காட்டாததால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இந்த நோய்த் தொற்றுகளின் பரவலைக் கட்டுப்படுத்தலாம். குறிப்பாக





பாதுகாப்பற்ற உடலுறவுக்குப் பிறகு இரத்தப் பரிசோதனை செய்ய நீங்கள் ஆசைப்பட்டால் அநுராதபுரம் பாலியல் நோய்கள் சுகாதார சேவைகளுக்கான மையத்துடன் தொடர்பு கொள்ளலாம். அந்த நிலையம் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது.

அநுராதபுரத்தில் எச். ஐ. வி தொற்றுக்குள்ளான நபர்களுக்கான சிகிச்சையானது STD சுகாதார நிலையத்தின் ஊடாக முறையாக மேற்கொள்ளப்படுகின்றது. தேவையான அனைத்து மருந்துகளும் இலவசமாக இங்கு வழங்கப்பட்டு வருவதுடன், மருந்துகளை பெற்றுக் கொள்ள வரும் நோயாளர்களுக்கு பயணச் செலவும் வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இது தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் நன்கொடையாளர்களின் ஆதரவுடன் இடம்பெறுகின்றது. அத்துடன் எச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களின் குழந்தைகளுக்கு கல்விக்கென பல்வேறு வழிகளில் உதவுவதும் ஒரு சிறப்பு அம்சமாகும்.

இலங்கையின் சிறந்த நான்கு STD சுகாதார நிலையங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள அநுராதபுரம் மையத்தில், இலங்கை முழுவதிலும் இருந்து HIV நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் சிகிச்சை பெறுகின்றனர். பரிசோதனைகள் அங்கு மேற்கொள்ளப்படுகின்றன. முற்றிலும் இரகசியம் காக்கப்பட்டுள்ள இந்த மையங்களுக்கு வாருங்கள், எச்.ஐ.வியில் இருந்து விடுபட தயங்காதீர்கள். பரிசோதனையை மேற்கொள்வது மிகவும் முக்கியம் என வைத்திய அதிகாரி ஹேமா வீரக்கோன் இது பற்றி வலியுறுத்தியுள்ளார். அவர்களைப் போன்று பாதுகாப்பற்ற பாலுறவில் ஈடுபடுபவர்கள், எதிர்காலத்தில் இலங்கையில் இருந்து வைரஸை ஒழிக்க உதவுமாறு மருத்துவ அதிகாரி ஹேமா வீரக்கோன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



**ஏ.ஆர்.எம்.ரபியூதீன்...**
*(திறப்பனை தினகரன் நிருபர்)*

## இரத்தப் பரிசோதனை செய்ய விரும்புவோர் தாராளமாக நேரில் வர முடியுமென அறிவிப்பு; இரகசியம் பேணப்படும்

# இலங்கையின் முதல்தர வங்கியாக தொடர்ந்தும் 14 ஆவது தடவையாக இலங்கை வங்கி தெரிவு

இலங்கை வங்கியானது தொடர்ந்தும் பதினான்காவது முறையாக இலங்கையின் முதற்தர வங்கியாக Brand Finance Lanka நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தேசத்தின் வங்கியாளராக விளங்கும் இலங்கை வங்கியானது, மக்கள் மத்தியிலான செல்வாக்கு, நிதிசார் பலம் போன்ற காரணங்களால் மட்டுமல்லாது நாட்டின் சமூக பொருளாதார இலக்குகளை அடைவதை தனது நோக்காக வரித்துக் கொண்டுள்ளமையினாலும், அனைத்து இலங்கையர்களதும் நம்பிக்கைக்குரிய நிதிசார் பங்காளராக இருப்பதாலுமே நாட்டின் 'முதற்தர வங்கி' என்ற அசைக்க முடியாத இடத்தைத் தக்க வைத்துள்ளது.

இலங்கை வங்கியின் தலைவர் காஞ்சன ரத்வத்தை கூறுகையில், 'இலங்கையின் பாரம்பரியத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள வர்த்தக நாமமான இலங்கை வங்கி, வங்கிச் செயற்பாட்டில் பங்கெடுக்கும் அனைவரும் அதன்மீது வைத்திருக்கும் நம்பிக்கையையிட்டு எப்பொழுதும் நன்றியறிதலைக் கொண்டுள்ளது. இந்நெருக்கடியான காலகட்டத்தில், இலங்கை வங்கியாகிய நாம் உங்களின் நம்பகமான நிதிப் பங்காளராக இருப்போம் என்றும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த எப்போதும் போல் பாடுபடுவோம் என்றும் எம்மக்களுக்கு வாக்குறுதியளிக்கிறோம்' என்றார்.

வங்கியின் பொது முகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறி தெரிவிக்கையில் 'இலங்கை வங்கி தொடர்ந்து 14 ஆண்டுகளாக முதற்தர வங்கியாக தெரிவு செய்யப்பட்டிருப்பதை ஒப்பற்ற சாதனையாகக் கருதுவதோடு இதற்கு ஊக்கியாக விளங்கும் எங்கள் நம்பிக்கைக்குரிய வாடிக்கையாளர்களுக்கும் அனைத்துப் பங்கீடுபாட்டாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எம்மக்களதும் நாட்டினதும் மாறிவரும் தேவைகளை நிறைவேற்றி,



எப்போதும்போல மக்களுக்காக உழைப்போம்' எனக் குறிப்பிட்டார்.

2000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் சேவை மையங்கள் மூலம் வாடிக்கையாளர் சேவையினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் இலங்கை வங்கி உலகெங்குமுள்ள தனது 1,400 இற்கும் மேற்பட்ட ATM ,CRM, CDM இயந்திரங்கள் மூலம் 24 மணித்தியாலங்களும் சேவையாற்றி வருகிறது. மேலும், நாட்டில் 640இற்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டுள்ள வங்கி, சென்னை, மாலே, ஹுங்ஹுமாலே, சீஷெல்ஸ் முதலான நகரங்கள்வரை தன் கிளைகளை பரப்பியுள்ளதோடு லண்டன் நகரில் முழுநேர வங்கித் துணைநிறுவனம் ஒன்றையும் நடத்தி வருகிறது.

வங்கியானது 2022 மாச் மாத நிலவரப்படி 4 ட்ரில்லியன் ருபாய்க்கும் அதிகமான சொத்துத் தளத்தையும் 3.1 ட்ரில்லியன் ருபாய்க்கும் அதிகமான வைப்புத் தளத்தையும் 2.4 ட்ரில்லியன் ருபாய்க்கும் அதிகமான கடன் ஏட்டையும் கொண்டுள்ளது.

இலங்கைப் பொருளாதாரத்தைத் நிலைநிறுத்தும் பொருட்டு வங்கி அதன் வெளிநாட்டு வலையமைப்பின் ஊடாக வெளிநாட்டுப் பண அனுப்பல்களை அதிகரிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்தது. அந்த வகையில் பயனாளிகளுக்கு வங்கி முறையின் மூலம் சிரமங்களேதுமற்ற பாதுகாப்பான பரிவர்த்தனைகளை உறுதி செய்ததோடு, வங்கி முறை மூலம் பணம் அனுப்பும் வெளிநாட்டவர்களை ஊக்குவிக்கும் சிறப்புத்திட்டத்தையும் அறிமுகப் படுத்தியுள்ளது.

82 ஆண்டுகளுக்கும் மேலாக வாடிக்கையாளர்களின் நம்பகமான நிதிப் பங்காளராக இருந்து வரும் இலங்கை வங்கி ஐக்கிய இராச்சியத்தின் The Banker சஞ்சிகையால் உலகின்



தலைசிறந்த 1000 வங்கிகளில் ஒன்றாகவும் 2021ஆம் ஆண்டுக்கான இலங்கையின் ஆகச்சிறந்த வங்கியாகவும் கௌரவிக்கப்பட்டுள்ளதோடு 'LankaPay Technnovation Awards 2022' நிகழ்வில் வங்கிகளுக்கிடையிலான டிஜிற்றல் முறைக் கொடுப்பனவுகளில் சிறந்து விளங்குகின்றமையை முன்னிட்டு 'டிஜிற்றல் ஹீரோ' என விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் துரிதமாக உணவு உற்பத்தி செய்யும் திட்டம் முன்னெடுப்பு

'ஒன்றிணைந்து எமது குடும்பத்தினதும் நாட்டினதும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவோம்' எனும் அரசாங்கத்தின் உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் விரைவான உணவு உற்பத்தி செயற்பாடுகள் அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. திகாமடுல்லவில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல் எனும் கருப்பொருளுக்கமைவாக இத்திட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு சமுர்த்தி கருத்திட்ட பிரிவின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட இவ்வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பி.ரவிச்சந்திரன், திட்ட முகாமையாளர் வ.சத்தியப்பிரியன், கிராம உத்தியோகத்தர் நிதர்ஷன், அக்கரைப்பற்று கிழக்கு விவசாய விரிவாக்கல் நிலையத்தின் பொறுப்பதிகாரி எம்.எஸ்.எம்.நிப்றாஸ், சமுர்த்தி உத்தியோகத்தர் கே.யுகவதனி மற்றும் உத்தியோகத்தர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.





இதன் போது விரைவான உணவு உற்பத்தி செயற்பாடுகளுக்கு அமைவாக மரவள்ளி நடுகை இடம்பெற்றதுடன் பாசிப்பயறு நடுகைக்கான விதைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுக்கு பற்றாக்குறை ஏற்படுமென்று அஞ்சப்படுவதாலேயே துரிதமாக உணவு உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**சுகிர்தகுமார்...**
*(வாச்சிக்குடா விஷேட நிருபர்)*

# விமானப் பயணிகளுக்கு வழிகாட்டும் ரோபோக்கள் தமிழகத்தில் அறிமுகம்

தமிழ்நாட்டில் முதன் முறையாக கோவை சர்வதேச விமான நிலையத்தில் பயணிகளுக்கு உதவும் வகையில் இரண்டு ரோபோக்கள் அறிமுகம் செய்யப்பட்டன. விமானம் ஏறச் செல்ல வேண்டிய வழி உட்பட பல்வேறு உதவிகளை இந்த ரோபோக்கள் பயணிகளுக்கு வழங்க உள்ளன.

தமிழகத்தில் உள்ள முக்கிய விமான நிலையங்களில் கோவை சர்வதேச விமான நிலையமும் ஒன்று. இங்கிருந்து சார்ஜா, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த விமான நிலையத்தின் மூலம் தமிழகம் மட்டுமின்றி,



வெளிநாடு, வெளிமாநில பயணிகள் பயன் பெற்று வருகின்றனர். இந்நிலையில் கோவை விமான நிலையம் வரும் பயணிகளுக்கு தேவையான உதவிகள் உதவி மையம் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு பதில் தற்போது தொழில்நுட்பத்தை பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி பயணிகளுக்கு உதவி செய்யும் வகையில் ரோபோக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்த ரோபாக்கள் செயற்கை நுண்ணறிவுடன் செயல்பட உள்ளன. இந்த ரோபோ பயன்பாடு நேற்று மாலை முதல் நடைமுறைக்கு வந்தது. முதற்கட்டமாக 2 ரோபோக்கள் அறிமுகம் செய்யப்பட்டன. ஒரு ரோபோ விமான புறப்பாடு முனையத்திலும், மற்றொரு ரோபா விமான வருகை முனையத்திலும் நிறுத்தப்படுகிறது. இந்த ரோபாக்கள் மூலம் பயணிகளுக்கு தேவையான தகவல்களை முழுமையாக வழங்க முடியும்.

இந்த ரோபா யாரின் உதவியும் இன்றி தானாக நகரும் தன்மை கொண்டது. விமான நிலையத்திற்கு வரும் பயணிகளை வரவேற்று, அவர்களுக்கு தேவையான தகவல்களை அளிக்கும். மேலும், பயணிகள் உதவி மையத்தை தொடர்பு கொள்ள விரும்பினால், ரோபோ உடனடியாக உதவி மையத்தை தொடர்பு கொண்டு தகவல்களை அளிக்கும். இந்த ரோபோக்கள் பயணிகள் விமானத்திற்கு செல்ல வேண்டிய வழி, பாஸ்போர்ட் சரிபார்ப்பு இடம் உள்ளிட்ட இடங்களுக்கான வழிகளை பயணிகளுக்கு தெரிவிக்க உள்ளது.

தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

# மன்னாரிலிருந்து இந்தியாவிற்கு கடத்தி செல்லவிருந்த உயர் ரக ஆடுகள் மீட்பு

தலைமன்னார் ஊர்மனை கடற்கரை பற்றைக்காட்டு பகுதியில் கால்கள் கட்டப்பட்ட நிலையில் உயர்ந்த ரக 5 ஆடுகள் தலைமன்னார் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

தலைமன்னார் கிராமம் கடற்கரை பகுதியிலுள்ள பற்றைக் காட்டில் உயர்ந்த ரக ஆடுகள் கால்கள் கட்டப்பட்ட நிலையில் கிடப்பதை அவதானித்த தலைமன்னார் கடற்படையினர் ஆடுகளை மீட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

உயர் ரக 5 ஆடுகளில் நான்கு ஆண் ஆடுகளும், ஒரு பெண் ஆடும் உள்ளடங்குகின்றன.

உயர் ரக ஆடுகள் இந்தியாவுக்கு கடத்தி செல்லப்படும் நோக்கில் கால்கள் கட்டப்பட்டு கிடந்ததன் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன் போது தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது ஆடுகளை காணவில்லை என்றும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் இருப்பதை அறிந்து உரிமை கோரியுள்ளார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை (8) மன்னார் நீதிமன்றில் இச்சம்பவத்தை தலைமன்னார் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதன் போது உரிமையாளரின் ஆவணங்களை பரிசீலித்த நீதவான் ஆவணங்களில் தெளிவின்மை காரணமாக சரியான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறும் அதுவரை ஆடுகள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தின் கண்காணிப்பில் பராமரிப்பை மேற்கொள்ளுமாறும் நீதவான் உத்தரவிட்டார். இதனையடுத்து ஆடுகள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாற்றுத்திறனாளியொருவரின் முச்சக்கர வண்டி திருட்டு

யாழ்.விசேட நிருபர்

யாழில் மாற்றுத்திறனாளியொருவரின் முச்சக்கர வண்டியை திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட முச்சக்கர வண்டியும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பின்வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி கடந்த மே மாதம் திருடப்பட்டது. முச்சக்கர வண்டி உரிமையாளர் ஒரு மாற்றுதிறனாளியாவர். முச்சக்கரவண்டியிலேயே அவரது வாழ்வாதாரம் தங்கியுள்ளது.

முச்சக்கர வண்டி திருட்டு போனமை தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், முச்சக்கர வண்டி உரிமையாளர் சமூக வலைத்தளங்கள் ஊடாக திருட்டு போன முச்சக்கர வண்டியை கண்டுபிடிக்க உதவுமாறு கோரியிருந்தார்.

அந்நிலையில் பருத்தித்துறை பொலிஸாருக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், துன்னாலை பகுதியை சேர்ந்த இளைஞனை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட போது திருடப்பட்ட முச்சக்கர வண்டி, அதன் இலக்க தகட்டை மாற்றி பயன்படுத்தி வந்தமையை கண்டறிந்து அதனை மீட்டனர்.

சந்தேகநபர் யாழில் இடம்பெற்ற பல்வேறு முச்சக்கர வண்டி திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனும் சந்தேகத்தில் பொலிஸார் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# குழுமோதலில் ஒருவர் உயிரிழப்பு 5 பேர் படுகாயம்

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

முல்லைத்தீவு மல்லாவி, 4 ஆம் யூனிட் திருநகர் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற குழுமோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இளைஞர்கள், ஒருவருக்கொருவர் தாக்குதல் நடத்தியதில் 6 பேர் காயமடைந்து மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்ட மருத்துவமனைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதில், இருவர் வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில், அதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வெளிமாவட்டங்களில் கடமைகளை பொறுப்பேற்காத 27 அதிபர்கள்

## வடக்கு கல்வி அமைச்சு அலட்சியம்

கோப்பாய் குறூப் நிருபர்

யாழ் மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்ட 27 அதிபர்கள் தமது கடமைகளை பொறுப்பேற்காது தொடர்ந்தும் யாழ்மாவட்டத்திலேயே தங்கியுள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது யாழ் மாவட்டத்தில் தீவகம் தவிர்ந்த யாழ், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாம வலயம் ஆகியவற்றிலிருந்து ஆசிரியர் நியமனத்திலும் அதிபர் நியமனத்திலும் இதுவரை வெளி மாவட்டம் செல்லாத சுமார் 47 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

அவர்களில் முதற்கட்டமாக 27 பேர் வெளி மாவட்டத்துக்கு வடக்கு கல்வி அமைச்சின் செயலாளரினால் இடமாற்றம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் பணி இடமாற்றம் வழங்கப்பட்ட அனைவரும் மேல்முறையீட்டை சமர்ப்பித்த போதும் அவர்களினால் முறையான காரணங்கள் தெரிவிக்கப்படாத காரணத்தினால் மேன்முறையீட்டு சபையினால் நிராகரிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் ஒரு அதிபர் மாத்திரம் வெளி மாவட்டத்தில் தனது கடமையை பொறுப்பேற்றுள்ளதாக தெரியவருகின்றது. ஏனையவர்கள் வடக்கு கல்வி அமைச்சின் செயலாளரின் துணையுடன் தொடர்ந்தும் யாழில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை



மன்னார் குறூப் நிருபர்

நானாட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள அச்சங்குளம் கிராமத்தில் நேற்று வியாழக்கிழமை (9) காலை 11 மணியளவில் சுனாமி ஒத்திகை நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அச்சங்குளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள அச்சங்குளம், அருகங்குண்று போன்ற கடற்கரையோர பிரதேசங்களில் எதிர்காலத்தில் சுனாமி தொடர்பான அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது அனர்த்தங்களிலிருந்து மக்களை விழிப்பூட்டுவதற்கும் அது சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான ஒத்திகை நிகழ்வு நேற்று (9) காலை 11 மணி தொடக்கம் 1 மணி வரை நடைபெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலகம், மன்னார் பிரதேச செயலகங்கள், இராணுவம், பொலிஸ், வேல்ட் விஷன், அனர்த்த முகாமைத்துவ பிரிவு சென் ஜோன் ஆம்புலன்ஸ், செஞ்சிலுவை சங்கங்கள் உட்பட பல நிறுவனங்கள் இணைந்து ஒத்திகை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், நானாட்டான் பிரதேச செயலாளர் மா. ஸ்ரீஸ்கந்தகுமார் உட்பட வைத்தியர்கள் உயர் அதிகாரிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசியல் திருத்தம் ஊடாக மாகாண சபைக்கு அதிகாரங்களை கொடுக்க வேண்டும்

யாழ்.விசேட நிருபர்

புதிய அரசியல் திருத்தம் ஊடாக பாராளுமன்றம் மாகாணசபை, உள்ளூராட்சிகளிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை கொடுக்க வேண்டும். இதுவே நாட்டினை பொருளாதார ரீதியிலும் ஜனநாயக ரீதியிலும் முன்னேற்ற பயன்படுமென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது 21 ஆவது திருத்தம் தொடர்பில் பேசப்படுகின்றது. இந்த 21ஆவது திருத்தம் என்பது 19ஆம் திருத்தத்தின் ஒத்த ஒன்றே. ஆனால் அதனை முழுமையாக 19ஆம் திருத்தத்தின் வடிவம் எனக் கூறமுடியாது. 19ஆவது திருத்தத்திலுள்ள பல விடயங்கள் 21ஆவது திருத்தத்தில் இல்லை.

19ஆம் திருத்தச் சட்டத்தை கொண்டுவருவதன் ஊடாக மீளவும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்களை கொடுக்க முடியும் என்பது மாத்திரமல்ல பல விடயங்களை நடைமுறைப்படுத்தலாம். நாடு பொருளாதாரரீதியாக பலமடைய வேண்டுமாகவிருந்தால் மாகாணங்கள் விருத்தியடைய வேண்டும்.

21ஆவது திருத்தம் மூலம் நாடாளுமன்றில் இருந்து பறித்த அதிகாரத்தையும் மாகாணங்களிடம் இருந்து பறித்த அதிகாரங்களையும் உள்ளூராட்சி சபையில் இருந்து பறித்த அதிகாரத்தையும் கொடுக்க வேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி செயற்பட வேண்டும் என்றார்.

மலைச்சாரல்

# மஸ்கெலியா எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்





மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியா எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்பாக மண்ணெண்ணெய் வழங்க கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள 1000ற்கு மேற்பட்ட பாவனையாளர்கள் பலநாட்களாக காத்து நிற்கின்றனர். கடந்த 26ஆம் திகதி மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. அதற்கு பின்னர் மண்ணெண்ணெய் வழங்கபடவில்லை. இப்பகுதியில் எரிவாயு மண்ணெண்ணெய் இன்மையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பலநாட்களாக மக்கள் வரிசையில் நின்று காத்திருக்கின்றனர். எனினும் மண்ணெண்ணெய் கிடைக்காமையால் அனைவரும் நேற்று காலை 10 மணிக்கு எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தினர். ஆர்ப்பாட்டம் காரணமாக ஹற்றன், நோட்டன் வீதி மூடப்பட்டு வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இது குறித்து எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளரிடம் கேட்ட போது கடந்த மாதம் 26 ஆம் திகதி எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு 3300 லீற்றர் வந்தது. அதை மக்களுக்கு வழங்கியுள்ளோம் இன்று 10.ஆம் திகதி மேலும் 6600 லீற்றர் மண்ணெண்ணெய் கொட்டகல இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அனுப்புவதாக கூறியுள்ளனர். மண்ணெண்ணெய் கிடைக்கும் பட்சத்தில் சகலருக்கும் பிரித்து வழங்கபடவுள்ளதாக அவர் கூறினார்.

# கண்டி மாவட்டத்தில் விசேட சுகாதார சேவைகள்

எம்.ஏ.அமீனுல்லா



கண்டி மாவட்டத்தில் பிராந்திய வைத்தியசாலைகளிலிருந்து சுகாதார சேவைகளை நாடும் நோயாளர்களின் நீண்டகால நோய்களைப் போக்குவதற்கான செயலமர்வு நேற்று முன்தினம் (07) பேராதனை போதனா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கண்டியிலுள்ள 76 பிராந்திய வைத்தியசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சுகாதார சேவை ஊழியர்கள் இச்செயலமர்வில் கலந்துகொண்டனர்.

நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் உடல் மற்றும் மன வலியைப் போக்க, உலகின் வளர்ந்த நாடுகளில் பல்வேறு சிகிச்சை முறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த வேலைத்திட்டங்களை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு படியாக இச்செயலமர்வு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் கண்டி மாவட்டத்திலுள்ள எந்தவொரு நோயாளரும் பேராதனை பொது வைத்தியசாலைக்கு செல்லாமல் பிராந்திய வைத்தியசாலையில் தங்களுடைய சிகிச்சை மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இதற்கான மருந்துகள் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளதாக வைத்தியர் சத்துர மாரசிங்க மற்றும் வைத்தியர் அஷானி ரத்நாயக்க ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கண்டி மாவட்ட சுகாதார சேவை உத்தியோகத்தர் அலுவலகம், இலங்கை மயக்க மருந்து நிபுணர்கள் சங்கம் மற்றும் பேராதனை போதனா வைத்தியசாலை இணைந்து ஏற்பாடு செய்த இச்செயலமர்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சேனக தலகல மற்றும் வைத்திய அதிகாரிகள், தாதியர்கள் பலர் கலந்துகொண்டனர்.



ஹற்றன் பெரிய டன்பார் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேக பெருவிழா மேளதான இசை முழங்க பக்தர்கள் கோஷமிட வேதாகம முறைபடி நேற்று மிக சிறப்பாக இடம்பெற்றது. கும்பாபிஷேக பெருவிழா யாக பூஜை இடம்பெற்று அதனை தொடர்ந்து காலை 9 மணிக்கு உச்சிஷ்ட கணபதி ஷோஷட உபசார பூஜை, 06ஆம் கால யாக பூஜை, மஹா பூர்ணாகுதி, திபாராதனை, நவசக்தி அர்ச்சனை, சதுர்வேத பாராயணம், உள்ளிட்ட நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்று மஹா கும்பாபிஷேக பெருவிழா நடைபெற்றது.

படம்: ஹற்றன் விசேட நிருபர்

# திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

பொருளாதார நெருக்கடி காரணமாக திருட்டு சம்பவங்கள் அதிகரித்துவருவதால் பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒவ்வொரு பகுதிகளிலும் பொலிஸார் ஒலிபெருக்கி ஊடாக பொது மக்களை எச்சரிப்பதற்கான நடவடிக்கைகளை தற்பொழுது மேற்கொண்டுள்ளனர். அதற்கமைய வீடுகளில் இருக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. வெளியில் நடமாடும் வாகனங்கள் தொடர்பிலும் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வெளிநபர்களை வீடுகளுக்குள் அனுமதிக்க வேண்டாம். உதவி கேட்டு, மின்சார தடை தொடர்பில், அல்லது அதிகாரிகள் என கூறி வீடுகளுக்கு வரும் நபர்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். நகைகள் அல்லது பெறுமதியான பொருட்களுடன் வெளியே நடமாடுவதை தவிர்க்க வேண்டும். இரவு நேரத்தில் வீடுகளின் பாதுகாப்பினை உறுதி செய்துகொள்ளுங்கள். கையடக்க தொலைபேசியின் EMI இலக்கத்தை பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள். வெளிநாட்டிலிருந்து வந்த நபர்கள் அவதானமாக இருங்கள். உங்களுக்கு பெறுமதியான பரிசு வெளிநாட்டிலிருந்து வந்துள்ளதாக கூறி வரும் நபர்களை வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம். பஸ்களில் புதிய நபர்கள் பழக்கம் ஏற்படுத்த முயற்சித்தால் அதனை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பஸ்களில் பைகள் வழங்கினால் பெற்றுக் கொள்வதை தவிர்த்து அவதானமாக இருங்கள். நீங்கள் ஏமாற்றப்படலாம் ஏமாற்றுக்காரர்களினால் குறி வைக்கப்படலாம் என பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா

கண்டி தினகரன் சுழற்சி நிருபர்

கண்டி பாத்தஹேவாஹெட்ட தொகுதி கலஹா ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

2ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட வசந்தமண்டப பூஜைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாற்குட பவனியும், 11ஆம் திகதி தேர்த்திருவிழா அன்று காலை 108 சங்காபிஷேகமும் நடைபெற்று 9 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து தேர்த்திருவிழா பவனி ஆரம்பமாகவுள்ளது. 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகேஷ்வர பூசையுடன் அன்னதானமும் மாலை மாவிளக்கு பூஜை, தீச்சட்டி பவனி இடம்பெற்று 13ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைரவர் பூஜையுடன் இத்திருவிழா நிறைவுபெறும்.

# பலாங்கொடை பிரதேச செயலகத்தின் மூலம் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை

பலாங்கொடை தினகரன் நிருபர்

பலாங்கொடை பிரதேச செயலகத்தின் மூலம் கிராம சேவகர் பிரிவுகள் தோறும் காணி வசதியுள்ள வீட்டுத்தோட்டப் பயிர் செய்கையில் ஈடுபட விரும்புபவர்களுக்கு அதனை ஊக்குவிக்க நிதியுதவியும் மற்றும் தேவையான மரக்கறி மற்றும் பழவகை கன்றுகளையும் விதைகளையும் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளன. உணவுபொருட்களின் விலை அதிகரிப்பினால் கிராம சேவகர் பிரிவுகள் தோறும் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபட விரும்பும் காணி வசதியுள்ள பொதுமக்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## வடக்கின் மின் உற்பத்தி... (03 ஆம் பக்கத் தொடர்)

நிபுணர்களால் கண்டறியப்பட்டு தற்போது பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறான திட்டங்களுக்கு டெண்டர் வழங்குவதா இல்லையா என சர்ச்சைகளும் எழுந்துள்ளன.

மின்சாரத் தேவையின் அவசியத்தை கருத்திற்கொண்டு அது தொடர்பில் சிறந்த தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். அதன்போது இயற்கை வளங்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடிய மின் சாரம் தொடர்பில் கவனம் செலுத்தப்படவும் வேண்டும்.

அதேவேளை, வடக்கில் மின் உற்பத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் மக்கள் பயத்துடனேயே காணப்படுகின்றனர் என்பதையும் குறிப்பிட வேண்டும். எவ்வாறாயினும் இவ்வாறான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும் போது அதன் மூலமான இலாபத்தின் ஒரு பகுதியை வடக்கின் அபிவிருத்திக்கு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மீன்பிடி... (03 ஆம் பக்கத் தொடர்)

ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் காலத்தில் அந்த திட்டங்கள் பூரணப்படுத்தப்படுகின்ற போது, அவற்றைப் பயன்படுத்தி பலனடைந்து கொள்வதற்கு வடக்கு மாகாண மக்கள் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல், சுயலாப அரசியல் தரப்புக்களின் கருத்துக்களை உள்வாங்கி, இவ்வாறான திட்டங்களுக்கு எதிரான மனோநிலையை வளர்த்துக் கொள்ளக்கூடாதென்று தெரிவித்தார்.

## இந்தியாவிலிருந்து 65,000... (03 ஆம் பக்கத் தொடர்)

விநியோகிக்க விவசாய அமைச்சு விவசாய சேவை விநியோக முகவர், இலங்கை உர செயலகம், கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் மற்றும் சிலோன் பெர்டிலைசர் நிறுவனம் போன்ற விநியோக வழிகளைப் பயன்படுத்தும் என அமைச்சர் இதன் போது தெரிவித்தார். ஒரு மூடை யூரியா விவசாயிகளுக்கு ரூ.10,000க்கு விற்கப்படும் என்றும், விவசாயத் துறை பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் மூலம் நிலையான விலைக்கு உடன்பாடு எட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விலையை முன்வைத்தபோது அமைச்சரவை அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள... (03 ஆம் பக்கத் தொடர்)

நிறைவு செய்வது தொடர்பில் அமைச்சரவை பத்திரம் ஒன்றும் சமர்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க வீடமைப்பு அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வேலைத் திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு நிறைவு செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தென்னகோனின்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஸ்தாபன சட்டத்தின் கீழ் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும், முதற்கட்ட விசாரணைகளை விட சிரேஷ்ட அதிகாரி ஒருவரே மேற்கொள்ள வேண்டும் என்றும் செயலாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான விசாரணைகளை நடத்தி 45 நாட்களுக்குள் தமக்கு அறிக்கை சமர்பிக்குமாறும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## மின்சார சேவை அத்தியாவசியமானது...

பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவித்து வரும் நிலையில் மின்வெட்டு பாரிய பிரச்சினையாக இருந்து வருகின்றது.

இந்த நிலையில் மின்சார விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக மாற்றும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

## கதிர்காமத்தில் இளம்...

விபத்தில் உயிரிழந்தவர்கள் கதிர்காமம் பிரதேசத்தை சேர்ந்த ரசிதகுமார, பிரியங்கிகா லக்ஷானி என அடையாளம் காணப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

## இ. மி. ச பொறியியலாளர்...

இதேவேளை, நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டது. எனினும், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் பல்வேறு விடயங்களை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தது.

ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையையடுத்து, பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டது.

## திரிபோஷ தட்டுப்பாடு;...

இல்லாமையே திரிபோஷா உற்பத்தி தடைப்படுவதற்கு முக்கிய காரணமாகும் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு திரிபோஷ வழங்குவதற்கு வெளிநாட்டு நிறுவனங்களிடம் உதவி கோரப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார்.

## துறைமுகங்கள் மீதான...

தொடர்பான கலந்துரையாடல் நேற்று (09) முற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகம், உலகின் அனைத்து முன்னணி கப்பல் நிறுவனங்களுடனும் இயங்குகிறது. நிர்வாக சபை உட்பட முழு ஊழியர்களும் பொறுப்புடன் செயற்பட்டு அதனைப் பாதுகாக்க வேண்டுமென ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சட்டத்தை மீறி செய்யப்படும் இறக்குமதிகளால் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஏலம் விடுவதில் முறைகேடுகள் நடப்பதாக தெரியவந்துள்ளது. சதொச மற்றும் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் போன்ற அரச நிறுவனங்களால் அத்தகைய பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் ஊழல் மோசடிகளை தடுக்க முடியுமெனவும் அரசாங்கத்துக்கு வருமானத்தை ஈட்ட முடியுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை இலக்காகக் கொண்டு துறைமுகத்தின் இளம் ஊழியர்களுக்கான பயிற்சிப் பிரிவை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தினதும் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தினதும் நிர்மாணிப் பணிகளில் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, இக் காலத்துக்குள் வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

## தொழிற்சங்கங்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

சட்டமூலத்தை முன்னெடுக்க சில தொழிற்சங்கங்கள் இடையூறு செய்தாலும் தொழிற்சங்க பயங்கரவாதத்துக்கு பயந்து பின்வாங்கப் போவதில்லையென மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார்.

மின்சார திருத்தச் சட்டம் கொண்டு வருவதனால் மின்சாரத்தை துண்டிப்பதாக பயங்கரவாத குழுக்களுக்கு சொல்ல முடியாது என்றும் மின்உற்பத்தி செலவை குறைப்பதற்காகவும் தொடர்ச்சியான மின்சாரம் வழங்குவதற்காகவும் யாருடன் வேண்டுமானாலும் மோத தயார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மின்சார சபை திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2030 ஆம் ஆண்டாகும் போது புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஊடாக 70 வீத மின்சார தேவையை நிறைவு செய்ய திட்டம் முன்வைக்கப்பட்டது. இதற்காக சட்டமூலங்கள் சமர்ப்பிக்க முற்படுகையில் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டன. அதனால் நெருக்கடி நிலை உருவானது.

மின்கொள்வனவு தொடர்பில் விலைகளை அமைச்சர்கள் முடிவு செய்வதில்லை. அதிகாரிகள் தான் முடிவு செய்கின்றனர். நாட்டுக்கு உகந்த முதலீட்டுக்கு ஏற்ற விலைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். இந்திய அதானி நிறுவனத்தையும் என்னையும் இணைத்து விமர்சிக்கின்றனர். அதானி பிரதிநிதியாக என்னை சித்தரிக்கின்றனர். இந்திய அரசு தான் அதானி நிறுவனத்தின் பெயரை பரிந்துரைத்துள்ளது. நான் அமைச்சராக வருவதற்கு முன்னரே அமைச்சரவை இதற்கு அனுமதி வழங்கியது. இரு அரசாங்கங்களுக்கிடையிலான திட்டமாகவே இது முன்னெடுக்கப்படுகிறது. பூநகரி மற்றும் மன்னாரில் 620 மொகா வோர்ட் மின்உற்பத்தி செய்ய முடியுமென அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. அதானி நிறுவனத்துக்கும் மின்சார திருத்தச் சட்டத்துக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றார்.

## அரசியல் செயற்பாடுகளை...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. பாராளுமன்றத்தில் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜனாமா செய்வதற்கான கடிதத்தை பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் நேற்று கையளித்த பின்னரே ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினார். நல்லாட்சி அரசாங்கத்தின் போது தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபட்டமையும், மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் வெற்றி பெறச் செய்தமையும் இரண்டு எதிர்பார்ப்புகளும் தற்போது நிறைவேறியுள்ளதாகத் தெரிவித்த பசில் ராஜபக்ஷ, விரக்தியினாலோ அழுத்தங்களினாலோ தான் பதவி விலகவில்லை என்றும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் கருத்துத் தெரிவித்த பசில் ராஜபக்ஷ, கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு தம்மைக் குறை கூறுவதற்கு சிலர் முயற்சித்தாலும், அதற்கான பொறுப்பை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென்றும் தெரிவித்தார். தான் இந்தியாவுக்குச் சென்று நடத்திய கலந்துரையாடலின் பிரதிபலனாகவே இன்று நாட்டுக்கு எண்ணெய், உரம், மா என்பன வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நம்பியிருக்க முடியாதென தெரிவித்த முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சுற்றுலாத்துறை, பணம் அனுப்புதல் மற்றும் ஏற்றுமதியை அதிகரிப்பதே அதற்கான ஒரே வழி எனவும் வலியுறுத்தினார்.

## சாணக்கியன் அமைச்சர் பிரசன்ன...

எனினும் இதற்கு பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தை காட்டிலும் தற்போதைய அரசாங்கம் கடன் அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளதாக தெரிவித்தார். இதன்போது குறுக்கிட்ட சாணக்கியன் எம்.பி, இந்த வீடுகளுக்கு ஒரு இலட்சம் ரூபா மாத்திரமே கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனைக் கொண்டு வீடுகளை அமைக்கமுடியுமா? என்றும் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த வீடமைப்புத்துறையின் முன்னாள் பிரதியமைச்சர், குறித்த வீடுகளுக்கு 6 இலட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.எனினும் வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் பொய்யானவை என்று சாணக்கியன் எம்.பி தெரிவித்தார்.

## இன்று முதல் முகக்கவசம்...

பணிப்பாளர் நாயகத்தினால் விசேட சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.அதற்கமைய, இன்று முதல் அமுலாகும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், முகக்கவசம் அணிய விரும்புபவர்கள் எந்த தடையும் இன்றி அதனை அணிந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன், சுவாசக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்கள் முகக்கவசம் அணிவது பொறுத்தமானது எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

இது அனைத்து மருத்துவ கல்லூரிகள் மற்றும் சுகாதார அமைச்சின் கூட்டு முடிவாகும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

## மின்சாரம் தடைப்பட்டமை...

அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் தொழிற்சங்கங்கள் எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையிலும் அல்லது வேலைநிறுத்தத்திலும் ஈடுபடுவதற்கு சுதந்திரம் உள்ளதாக அவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்தார்.

இந்நிலையில் நிலைமை சரியான நேரத்தில் சீராகும் வரை பொதுமக்கள் மற்றும் மின்சார பாவனையாளர்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## பாராளுமன்றத்தில் நேற்று...

அதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

எதிர்க்கட்சியிலிருந்து அந்த பதவிக்கு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரது பெயர் வழங்கப்பட்டிருந்த போதும் சபாநாயகர் நிலையியற் கட்டளையை நிறுத்தி முறையற்ற விதத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரை நியமிப்பதற்கு வழிவகுத்தார் என்ற குற்றச்சாட்டையும் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி சபையில் முன்வைத்தார்.

அவ்வாறு எந்த முறையற்ற அல்லது இரகசியமான செயற்பாடுகளும் இடம்பெறவில்லையென்றும் சபையின் அனுமதி பெற்றே உறுப்பினர் ஒருவர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளாரென்றும் சபாநாயகர் இதன்போது தெளிவுபடுத்திய போதும் அதனை லக்ஷ்மன் கிரியெல்ல ஏற்றுக் கொள்ளாததால் அதனைத் தொடர்ந்து இருவருக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அதன் போது கருத்து தெரிவித்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேக்கர,

தற்போது அரச நிதி தொடர்பான குழுவின் தலைவராக எதிர்க்கட்சியை சேர்ந்த ஒருவரே உள்ளார். அனுர பிரியதர்சன யாப்பா எம்.பியே அப்பதவியை வகிப்பதாகவும் அவர் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் குழுவை சேர்ந்தவர் என்றும் அதற்கிணங்க அவரும் எதிர்க்கட்சியே எனவும் அவர் குறிப்பிட்டார்.

## 84 மேலதிக வாக்குகளால்...

84 மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

நேற்றைய தினம் காலை எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர மேற்படி சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்தார்.

அதனையடுத்து ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்பிக்கள் பலரும் ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக்களை முன்வைத்தனர். விவாதத்தின் இறுதியில் அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பதிலளித்து உரையாற்றினார்.

அதன்போது எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல வாக்களிப்பு நடத்தப்பட வேண்டுமென சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

அதன்படி வாக்களிப்பு நடைபெற்றது.

வாக்கெடுப்பின் இறுதியில் மேலதிக வாக்குகளால் இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்ததுடன் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் குழுவின் சிலர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நிலையில் மேலும் சிலர் ஆதரவாக வாக்களித்தனர்.

வாக்களிப்பின் இறுதியில் எதிர்க்கட்சியினர் முன்வைத்த திருத்தங்கள் கவனத்திற் கொள்ளப்படவில்லையென எதிர்க்கட்சியின் எம். பி ஹர்ஷ டி சில்வா தெரிவித்ததையடுத்து மீண்டும் வாக்களிப்பு நடைபெற்றது. அந்த வாக்களிப்பில் எதிர்க்கட்சியின் சார்பில் ஹர்ஷ டி சில்வா முன்வைத்த யோசனைக்கு ஆதரவாக 51 வாக்குகளும் எதிராக 115 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதன்படி எதிர்க்கட்சியின் திருத்தங்கள் அதன் மூலம் நிராகரிக்கப்பட்டன.

அந்த வாக்களிப்பின் பின்னரும் சட்டமூலத்தின் 04 ஆவது அத்தியாயம் தொடர்பில் கட்சியினால் மீண்டும் ஒரு வாக்களிப்பு கோரப்பட்டது. அந்த வாக்களிப்பில் ஆதரவாக 116 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்டன. நேற்றைய விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றிய மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர:

நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் நாட்டில் மீள் புத்தாக்க மின் உற்பத்தியை உருவாக்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பென தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், எதிர்க்கட்சிக்கு தேவையான வகையில் அரசாங்கம் தீர்மானம் எடுக்க முடியாது. திருத்தங்களை முன்வைப்பதற்கு எதிர்க்கட்சிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்தார்.

## நாட்டில் அரிசி தட்டுப்பாடு...

இதுவரை 39,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது நெல் சந்தைப்படுத்தும் சபையின் வசமுள்ள நெல்லை அரிசியாக்கி சந்தைக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

குறைபாடு ஏற்பட்டால் மேலும் அரிசியை இறக்குமதி செய்ய முடியுமென தெரிவித்த அமைச்சர், அரிசி, பருப்பு, சீனி போன்ற பொருட்களை தேவைக்கு அதிகமாக சேமிக்க வேண்டிய அவசியம் கிடையாதென்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இறக்குமதி செய்யப்படும் அரிசி மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் பெறப்படும் அரிசியையும் ச.தொ.ச மூலம் மக்களுக்கு 200 ரூபாவுக்கு குறைவாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். நாம் எதிர்பார்த்ததற்கு மேலதிகமாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்நாட்டு விவசாயிகள் தயாராக உள்ளனர். அவர்களுக்கு தேவையான உரம், விதைகள் உள்ளிட்ட அனைத்தையும் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியுமானால் நாம் வெளி நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இருக்காது.

தற்போது 11,150 மெற்றிக் தொன் யூரியா உரம் உட்பட மேலும் பல வகை உரம் கையிருப்பில் உள்ளன.

மேலும் உரம் இறக்குமதிக்காக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உதவியால் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியையும் அமைச்சரவை வழங்கியுள்ளது.

அதைப்போன்று விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நாடளாவிய ரீதியில் உள்ள 248 விவசாய அபிவிருத்தி நிலையங்கள் ஊடாகவும் எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்கு பின்னர் பெரும்போக அறுவடை மூலம் நாட்டுக்கு போதுமான நெல் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரிசி விலை உயரும். அரிசி 500 ரூபாவாக அதிகரிக்கலாமென சிலர் வதந்திகளைப் பரப்புவதன் மூலம் மக்கள் அதிகளவு அரிசியை சேகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அவ்வாறு அரிசியை சேகரித்தால் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அந்த அரிசி பாவனைக்கு உதவாது. அதனை நுகர்வோர் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

## நிறைவு செய்ய அரசு உடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

இருக்கும் வீடுகளை அரசாங்கம் பூரணப்படுத்தி கொடுப்பதா,இல்லையா? என்பதை தெரிவிக்க வேண்டும்.

வீடற்ற பிரச்சினைக்கு வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பெருந்தோட்ட பகுதி மக்களே அதிகமாக முகம்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக 30 வருட யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கு மக்களின் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. அதனால் அந்த மக்களுக்கு கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் எமது கட்சியின் வேண்டுகோளுக்கிணங்க வீடமைப்பு அதிகாரசபையுடன் இணைந்து பாரிய வீடமைப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு பல வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடை நடுவில் அவை நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கிராமத்துக்கு ஒரு வீடு என்ற வேலைத்திட்டத்தின் கீழாவது இந்த வீடுகளை பூரணப்படுத்தித் தருமாறு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் உட்பட பல தரப்பினரிடமும் நாம் கேட்டுக்கொண்டிருந்தோம். அப்போது, அந்த வீடுகள் நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஆரம்பிக்கப்பட்டவை என சாக்குப்போக்கு கூறப்பட்டது.

வடக்கு கிழக்கு மக்கள் பெரும்பாலும் விவசாயம், கடற்தொழில் போன்ற தொழிலை மேற்கொண்டு வருபவர்கள்.

இவ்வாறு நாலாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் காணப்படுகின்றன. வீடமைப்பு அமைச்சினால் இந்த வீடுகளை பூரணப்படுத்தி தர முடியுமா அல்லது அந்த மக்கள் வறு வழிகளை மேற்கொள்ள வேண்டுமா என அமைச்சர் உறுதியாக தெரிவிக்க வேண்டும் என்றார்.

## நாட்டில் உணவுக்காகவும்...

அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரிசைகளில் நான் முந்தி, நீ முந்தி என்றும், பெற்றோல் தீர்ந்துவிட்டால், பெற்றோல் நிலைய ஊழியர்களைத் தாக்குவது என்றும், பெற்றோல் கொண்டுவரும் லொறிகளை நிறுத்தி குழப்பம் விளைவிப்பது என்றும், சமையல் வாயு கலன்களை கொண்டுவரும் லொறியை நிறுத்தி, கலன்களை அடாத்தாக தூக்கிச் செல்வது என்றும் கலவரங்கள் ஏற்பட ஆரம்பித்துவிட்டன.

பெற்றோல் ஒழுங்காக விநியோகிக்கவில்லை என கூறி பெற்றோல் நிலைய உரிமையாளர் ஒருவரின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பொலிஸார் மோதல் பரவலாக ஏற்படுகிறது. முதல் மோதலில் பொலிஸ் சுட்டதில் ஒருவர் இறந்தார். பலர் காயமடைந்தனர். இதனால் பொலிஸ் மீது கடும் விமர்சனம் எழுந்தது. பொதுவாக உலகில் நல்ல பெயர் இல்லாத ஸ்ரீலங்கா பொலிஸாரும், இராணுவத்தினரும் இப்போது அசாத்திய பொறுமை காக்கின்றனர். இப்படியே போனால் மக்கள், கடைகளை, வர்த்தக அங்காடிகளை உடைப்பது போன்ற நிலைமைகளும் ஏற்பட வாய்ப்புண்டு. அப்போது ஸ்ரீலங்கா பொலிஸ், இராணுவம் பொறுமை காக்குமா அல்லது சுடுமா அல்லது மக்களுடன் சேர்ந்து புரட்சி செய்யுமா என்று பல ஊகங்கள் நாட்டுக்குள்ளே உலவத் தொடங்கிவிட்டன என குறிப்பிட்டுள்ளார்.

## அதிக விலைக்கு அரிசியை...

விற்பனை செய்யப்பட்டதற்கு எதிராக மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் பிரகாரம், 1 கிலோகிராம் நாட்டு அரிசியின் விலை ரூபா 220/, சம்பா அரிசி 1 கிலோகிராம் 230/ மற்றும் கீரி சம்பா அரிசி 1 கிலோகிராம் 260/ ரூபா விற்கும் விற்பனை செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அடுத்த நான்கு மாதங்களுக்கு தேவையான அரிசியை இறக்குமதி செய்யுமாறு விவசாய அமைச்சு வர்த்தக அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

## எம்.பி பதவியிலிருந்து...

பதவி காலத்தில் நாட்டிற்கு ஏற்ற திட்டங்களை வழங்குவதற்கு எதிர்பார்த்திருந்தேன். அது இயலாமல் போயிருந்தது. மக்களின் எதிர்ப்பினை அடுத்து பதவி விலக வேண்டிய சூழல் ஏற்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் அனைத்து அமைச்சரவை அமைச்சர்களுடன் நானும் பதவி விலகினேன்.

நாட்டில் டொலரின் கையிருப்பு தாம் பதவியேற்றதன் பின்னர் இல்லாது செய்யப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை நான் முற்றாக மறுக்கின்றேன்.நானும் கடுமையான சூழலிலேயே நிதியமைச்சராக பொறுப்பேற்றிருந்தேன் என அவர் தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் ஊடாக தகுதிவாய்ந்த ஒருவரை பாராளுமன்றுக்கு தெரிவுசெய்வதற்கு வழிவகுக்கும் வகையில் தாம் பதவி விலகுவதாகவும் தெரிவித்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அவசியம் ஏற்படின் தொடர்ந்தும் கட்சியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## எனது எதிர்பார்ப்புகளை...

காணப்பட்டது எனினும் ஐக்கிய மக்கள் சக்தி எனது எதிர்பார்ப்பை நிறைவேற்ற தவறிவிட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி என்னை கட்சியில் இணைந்துகொள்ளுமாறு அழைத்தது. ஆனால் நான் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட தீர்மானித்துள்ளேன். ஐக்கிய மக்கள் சக்தி எதிரியில்லை ஆனால் ஒரு நண்பன் என அவர் தெரிவித்துள்ளார்.

பரந்துபட்ட கூட்டணியை உருவாக்குவது உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால திட்டங்கள் குறித்து எனது 43வது பிரிகேட் உன்னிப்பாக அவதானிக்கும் என தெரிவித்த அவர் நான் அரசாங்கத்தில் இணையமாட்டேன் எனவும் தெரிவித்துள்ளார்.

தனக்கு வாக்களித்த மக்களின் நன்மதிப்பை ஒருபோதும் வீணடிக்கமாட்டேன் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தங்களின் திட்டத்தை பொருளாதார ரீதியாக ஆதரிக்க அரசு தயாராக இருந்தால், அதற்கு ஆதரவு அளிப்பதாகவும், அதைவிடுத்து அரசாங்கத்தின் நடவடிக்கை மீது கற்களை வீசுவது தமது எதிர்பார்ப்பு இல்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## யானை மிதித்து 04 மாத...

மாலை 04.30 மணியளவில் இடம்பெற்றதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவில், விநாயகபுரத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியும் அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் மாட்டுப்பண்ணை மாடுகளை பராமரிக்கும் வேலையை பள்ளக்காடு பிரதேசத்தில் தங்கியிருந்து செய்துவருகின்றனர்.

சம்பவ தினம் அந்த பகுதியிலுள்ள மரத்தின் கீழ் குழந்தையை உறங்க வைத்து விட்டு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது திடீரென அங்கு வந்த யானை மரத்தின் கீழ் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை தாக்கியதையடுத்து குழந்தை சம்பவ இடத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தது. யானையின் தாக்குதலுக்குள்ளான தாய் அக்கறைப்பற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். திருக்கோவில் 03ஆம் பிரிவு பாடசாலை வீதி விநாயகபுரத்தைச் சேர்ந்த சுதாகரதன் கவீந்திரன் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸ் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று...

தடை விதித்து உத்தரவிட்டது

மே 09 ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடலிலும் கொள்ளுபிட்டி யிலும் நடந்த சம்பவங்கள் தொடர்பாக ஒரு சந்தேக நபராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பெயரிடப்பட்டிருந்தார். அவரை கைது செய்வதற்கு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமேக நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்திருந்தார். இந்நிலையில் தன்னை கைது செய்வதை தடுக்க உத்தரவிடக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ரிட் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இம்மனு தொடர்பாக ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று வியாழக்கிழமை இரவு 8.00 மணிக்கு முன்னர் கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சரணடைய வேண்டுமென உத்தரவிட்டிருந்தது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்யுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை அதுவரை நிறைவேற்ற வேண்டாமெனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டது. இதன்படியே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் சரணடைந்துள்ளார்.

## குடியேற முயன்ற பதினைந்து...

20 முதல் 30 வயதுக்குட்பட்ட ஆண்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர். நீர்கொழும்பு வாசிகளான இவர்கள் நேற்று பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

19 நாட்களுக்கு முன்னர் தமது பயணத்தை ஆரம்பித்த இக்குழுவினர், பல நாட்கள் இழுவைப் படகில் பயணித்த போது அவுஸ்திரேலிய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டு கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

அவர்கள் அவுஸ்திரேலிய விமானப் படையின் விசேட விமானத்தில்,அவுஸ்திரேலியப் படைகளின் அதிகாரிகளின் ஒரு பாரிய குழுவுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்தக் குழு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஒப்படைத்தது. பின்னர் விமானநிலையத்திலுள்ள குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 15 பேரிடமும் வாக்குமூலங்களைப் பதிவு செய்ததன் பின்னர், அவர்களை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர்.



இலங்கைக்கு 40 இலட்சம் ரூபா பெறுமதியான 70 தொன் எடை கொண்ட உலர் உணவுப் பொருட்கள் கடந்த 7 ஆம் திகதி அனுப்பப்பட்டன. இதில் அரிசி, கோதுமை, எண்ணெய், மைசூர் பருப்பு, பால்மா என்பன மூன்று கொள்கலன்களில் அனுப்பப்பட்டன. இலங்கைக்கான துணைத்தூதுவர் முனைவர் வெங்கடேஸ்வரன், ரோட்டரி ஆளுநர்கள் பழனி, சரவணன், ரோட்டரி சங்க மூத்த உறுப்பினர்கள் (சென்னையைச் சார்ந்த ஓட்டல் அதிபர்) சக்ரவர்த்தி, எம்ஜிஆர் ஜானகி கலைக் கல்லூரி தலைவர் குமார் ராஜேந்திரன், மேனாள் ஆளுநர் சம்பத்குமார், மருத்துவர் சாய் பிரசன்னா மற்றும் ஷபீர் ஆகியோர் இந்த பொருட்கள் அனுப்பும் நிகழ்வில் கலந்து கொண்டனர். அம்மா அறக்கட்டளையைச் சார்ந்த சாண்டில்யன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்த கொள்கலன்கள் கொடியசைத்து அனுப்பி வைக்கப்பட்டன. இவை முதற்கட்டமாக அனுப்பப்பட்டுள்ளன. இன்னும் பல கலன்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று இத்திட்டத்தின் தலைவரும் பதிப்பாளர் ரோட்டரி மாவட்ட முன்னாள் ஆளுநருமான கோ. ஒளிவண்ணன் குறிப்பிட்டார். ஹென்றி விக்ரமசிங்கேவின் வழிகாட்டலின்படி இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக கோ. ஒளிவண்ணன் குறிப்பிட்டார்.




திகதி 08.06.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4780
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,654,790.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 4 4 4 8 0 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,190,144.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3022
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,077,780.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 55 70 77 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,480,502.56

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1258
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,595,680.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 0 7 7 8 0 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,670,435.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 810
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,106,860.00
வெற்றி இலக்கினம் Q வெற்றி இலக்கங்கள் 06 21 36 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,640,189.60

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0089
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,045,380.00
இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 20 27 39 43
விசேட இலக்கினம் மிதுனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,754,922.60

25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1128
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,413,360.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 255,192,210.00
A 19 06 12 59 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்யதல்

கடுகஸ்தோட்டை, கொஹாகொட, இலக்கம் 339/1இல் குடியிருக்கும் அடையாள அட்டை இலக்கம் 880961721V உரிய **குரபே கெதர லக்ஷ்மன் ஸாலிய சம்பத்** ஆகிய என்னால் நெடொல்பிடிய, வெலிஆரா, இலக்கம் 228ல் குடியிருக்கும் அடையாள அட்டை இலக்கம் 905033417V என்ற **கொக்கலை ஹேவாகே திவன்கா ஹர்சனீ** என்பவருக்கு அகுனுகொலபெலெஸ்ஸ ஹெடகெடியேயில் குடியிருக்கும் **ரதீசா தேசானி முனஸிங்ஹ** என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 13 மற்றும் வருடம் 2019 ஜூலை மாதம் 01ம் திகதிய அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்வதாக இலங்கை சோசலிச குடியரசின் மக்களுக்கு இத்தால் மூலம் அறியத்தருகிறேன்.

எனக்காகவோ என் சார்பில் மேலே குறிப்பிட்ட **கொக்கல ஹேவாகே திவன்கா ஹர்சனீ** என்பவரால் மேற்கொள்ளும் விடயங்கள் அனைத்திற்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

**குரபே கெதர லக்ஷ்மன் ஸாலிய சம்பத்**

## கொஸ்வத்தை பொலிஸ் பிரிவில் திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

*நீர்கொழும்பு தினகரன் நிருபர்*

வடமேல் மாகாணத்தின் கொஸ்வத்தை பொலிஸ் பிரிவில் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த பொலிஸ் பிரிவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர், ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டு முன்வாசலில் வைக்கப்பட்ட சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆறு பிளாஸ்டிக் நாற்காலிகள் திருடப்பட்டுள்ளது.

இதனால் பிரதேசவாசிகள் அச்சமடைந்துள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற தினத்தன்றிரவு ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி தனது மகனுடன் தனிப்பட்ட அலுவலொன்றுக்காக வெளியே சென்றிருந்தார்.

இந்தவேளையிலேயே பிளாஸ்டிக் நாற்காலிகள் திருடப்பட்டுள்ளன. மேலும் வீட்டினுள்ளே இருந்த ஏனையோர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்துக் கொண்டிருந்த போதே, திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொஸ்வத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


# பெறுகை அறிவித்தல்

### கல்வி தகவல் தொழில் நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு

### சபரகமுவ மாகாண சபை

சபரகமுவ மாகாண சபையின் கல்வி தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரால் GEM திட்டம் 2022இன் கீழ் சபரகமுவ மாகாண பாடசாலைகளில் செயற்பாட்டு அறைகளுக்காக DESK TOP கணனிகள் 60 மற்றும் LAPTOP கணனிகள் 800 (40 தரங்களில் 800 வரை கேள்விகளை சமர்ப்பிக்கலாம்) கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. மேலதிக விபரங்கள் www.sg.gov.lk இணைய தளத்திற்குள் உள்ள கேள்வி அறிவித்தல் இணைய தள பக்கத்திற்கு சென்று அல்லது www.moe.sg.gov.lk என்ற அமைச்சு இணையதள பக்கத்திற்கு பிரவேசித்து பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் இறுதித் திகதி 2022.07.04 பி.ப. 2.00 வரையாகும்.

**சுஜானி ஆர். விஜேதுங்க,**
**செயலாளர்,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு,**
**சபரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம் - இரத்தினபுரி,**
**045-2222542**
2022.06.09

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான விற்பனை**

# மக்கள் வங்கி

# ஏல விற்பனை

## காலி கோட்டை கிளை (013)

**காணித்துண்டம்:** தென் மாகாணம் காலி மாவட்டத்தில் காலி மாநகர சபை எல்ல மற்றும் காலி கடவத்சதர பகுதி என்பவற்றுக்குட்பட்ட காலி கடவத்சதர பிரதேச செயலாளர் பிரிவில் 226 மஹமோதர கிராம அலுவலர் பிரிவிலுள்ள 'சின்னத்தம்பிகேவத்த' என்றறியப்படுகின்ற 'பிரங்ச காரயாகேவத்த' என அழைக்கப்படும். 2013.10.06ஆந் திகதியன்று உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ஜீ. வீரசூரிய என்பவரினால் நில அளவையிடப்பட்ட மற்றும் 2013.10.08ஆந் திகதிய 40/2013ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட A எனும் காணித்துண்டினது $A_3$ எனும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்:** கட்டிடம் பயிர்கள் மற்றும் எல்லாவற்றையும் சேர்த்து 40/2013ஆம் இலக்க தள வரைபடத்திற்கிணங்க பதினேழு தசம் ஐந்து பேர்ச்சஸ் (A-0, R-0, P-17.5) காலி காணிப் பதிவகத்தில் இலக்கம் Q-188/138இன் கீழ் பதிவு செய்யப்பட்டள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் உரிய இடத்தில் 2022.07.02ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு காலி பிரதான அலுவலகம் அமைந்துள்ள அதே இடத்தில் ஏல விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக:** 2020.12.04ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2020.12.04ஆந் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி:** காலி பிரதான பேருந்து நிலையத்திலிருந்து கொழும்பை நோக்கி காலி வீதி நெடுகிலும் சுமார் 1.8 கி.மீ. சென்று விடயப்பொருளாகவுள்ள ஆதனத்தை உங்கள் வலது கைப்புறமாகக் காணலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை:** ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூரதிகார சபைக்குச் செலுத்தப்பட்டதான உள்ளூரதிகார சபை வரி 01%
3. விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம மாத்திரம்) ஏல விற்பனையாளர் தரகு
4. எழுதுவிளைஞர் மற்றும் கூவுநர் கட்டணம் 100/-
5. விற்பனையின் மொத்தச் செலவுதொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும இருப்பின் அவ்விடப்பனவுகளும்
6. சான்றுப்படுத்துகைக்கான முத்திரைக் கட்டணம்

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம் (காலி), இல. 22, லோவர் டிக்சன் வீதி, காலி என்பவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி: 091 2232311, 2223563 தொலைநகல்: 091 2231413

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பின்வரும முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின் வங்கியானது ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை இழப்பிப்பதற்கும் ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் உரிமையுடையதாதல் வேண்டும்.

**11/55, போகஹவத்த,**
**குடாபுத்கமுவ, அங்கொட**
**தொலைபேசி: 011 2053286**
**072 3207533, 076 9217329**

**ஈ.எஸ். ராமநாயக்க,**
**நீதிமன்ற ஆணையாளரும்**
**உரிமம் பெற்ற ஏல விற்பனையாளரும்,**
**மதிப்பீட்டாளர் மற்றும்**
**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள சுற்றுலா சேவை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்

### (எரிபொருள், எரிவாயு, கடன்)

மேற்படி தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள இலத்திரனியல் படிவத்தை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் இணையதளத்தின் (sltda.gov.lk) ஊடாக பதிவு செய்துகொண்டுள்ள நிறுவனங்கள், சுற்றுலா வழிகாட்டியாளர்கள் மற்றும் சுற்றுலா சாரதிகளின் அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு இப்போது அனுப்பப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்கள் 2022 ஜூன் 26ஆம் திகதி முதல் கோரப்பட்டுள்ளன என்பதுடன் இதுவரை உங்களுக்கு இந்தத் தகவல்களை வழங்க முடியாது போயிருந்தால் பின்வரும் மின்னஞ்சல் (Google Form) ஊடாக அந்தத் தகவல்களை வழங்குங்கள்.

Fuel: https://forms.gle/YSrqPXytrkPPiw9K7
Gas: https://forms.gle/1fQsdiyi7GaqmoMv9

உங்களது அனுமதிப்பத்திரத்தை ஆகக் குறைந்தது 2019ஆம் வருடம் வரை புதுப்பிக்காதிருந்தால் அல்லது நீங்கள் 2019ஆம் வருடத்தின் பின் பதிவு செய்து கொண்டிருந்தால் கடன் மற்றும் லீசிங் தொடர்பான பின்வரும் இலத்திரனியல் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பவும்.

Loan/ lease: forms.gle/aAZozAMf964iFEc4A

உங்கள் தகவல்களை 2022 ஜூன் 12ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை அனுப்பலாம்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
சுற்றுலா மற்றும் காணி அமைச்சு

# உணவுப் பயிர்ச்செய்கையை ஊக்குவித்துள்ள மார்க்கம்

இஸ்லாம் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையையும் ஊக்குவித்திருக்கும் ஓர் இறைவழிகாட்டலாகும். அல் குர்ஆன் வசனங்களும் நபி(ஸல்) அவர்களது போதனைகளும் முன்னோர்களின் நடைமுறைகளும் எமக்கு இதனை உணர்த்தி நிற்கின்றன.

ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் விவசாயம் பெரும் பங்காற்றுகிறது. பஞ்சமும் பட்டினியும் நிறைந்து விலைகள் அதிகரித்து, பொருளாதார நெருக்கடிகள் நிறைந்த காலத்தில் இறக்குமதிகளை மாத்திரம் நம்பியிருக்காது உள்நாட்டு விவசாயத்தில் கரிசனை காட்டுவது மிகவும் அவசியமான விடயம். இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யூசுப் (அலை) அவர்கள் கூட 'ஏழு வருடங்கள் நீங்கள் தொடராக விவசாயத்தில் ஈடுபடுவீர்கள்...' என்று கூறி தனது சமூகத்தை வழிநடாத்தியுள்ளார்கள்.

'மனிதன் தனது உணவைக் கவனித்து பார்க்கட்டும், நிச்சயமாக நாமே மழையை நன்கு பொழியச் செய்கிறோம், பின்பு பூமியை பிளக்கச் செய்தோம், பின்னர் உங்களுக்கும் உங்களது கால்நடைகளுக்கும் பயனளிப்பதற்காக, தானியங்களையும், திராட்சை, காய்கறிகள், ஸைத்தூன், பேரீச்சை, அடர்ந்த தோட்டங்கள், கனிவர்க்கங்கள், புற்பூண்டுகளை முளைக்கச் செய்தோம்.

**(அல் குர்ஆன்: அபஸ 24 – 32)**

'உயிரற்ற பூமி அவர்களுக்கு ஒரு சான்றாகும். நாம் அதற்கு உயிர் கொடுத்து அதிலிருந்து தானியத்தை வெளிப்படுத்தினோம். அதிலிருந்து அவர்கள் புசிக்கிறார்கள். அவர்கள் கனிகளை உண்பதற்காக நாம் அதில் பேரீச்சை, திராட்சை தோட்டங்களை உண்டாக்கினோம். அதிலே நீரூற்றுக்களை பீரிட்டெழச் செய்தோம். இவை அவர்களது கரங்கள் உருவாக்கியவை அல்ல, அவர்கள் நன்றி செலுத்த மாட்டார்களா? **(அல் குர்ஆன்: யாசீன் 33 – 35)**

உயிரற்ற பூமி என்பது தாவரங்களற்ற பூமியைக் குறிப்பதாக இமாம் இப்னு கஸீர் என்ற அல்குர்ஆன் விரிவுரையாளர் கருதுகின்றார். விவசாயம் இடம்பெறுகின்ற பசுமையான பூமி உயிரோட்டமுள்ளது. விவசாயமற்ற கட்டாந்தரைகள் பிணத்திற்கு சமனானது என்பதை புரிந்துகொள்ளலாம். 'அவன்தான் நீங்கள் சொன்னபடி கேட்கும் விதமாக பூமியை உங்களுக்கு வசப்படுத்தி தந்துள்ளான். எனவே அதன் பல பகுதிகளிலும் சென்று அது தரக்கூடிய வாழ்க்கை வசதிகளை உண்ணுங்கள். **(அல் குர்ஆன்: முல்க் 15)**

இவ்வாறு உணவு பயிர்ச்செய்கையை அல் குர்ஆன் ஊக்குவித்துள்ள அதேநேரம், நபி (ஸல்) அவர்களும் அதன் சிறப்புகளைப் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக்கூறியுள்ளார்கள்.

'ஒரு முஸ்லிம் ஒன்றை நட்டுகிறார் அல்லது விவசாயம் செய்கிறார். அதிலிருந்து ஒரு பறவையோ, மனிதனோ, கால்நடையோ சாப்பிட்டாலும் அது அவருக்கு ஸதகா (தர்மம்) செய்த நன்மையை வழங்குகிறது. முஸ்லிம் என்ற கிரந்தத்தின் அறிவிப்பில் 'அது திருடப்பட்டாலும், அதிலிருந்து யாராவது எடுத்துக் கொண்டாலும் அவருக்கு ஸதகா செய்த நன்மை கிடைக்கிறது என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்

**(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

உம்மு முபஷ்ஷிர் என்ற அன்சாரி பெண்மணியிடம் பேரீச்சை மரமொன்று இருந்தது. அங்கு நபி (ஸல்) அவர்கள் வந்து 'இதனை நாட்டியவர் யார்? அவர் ஒரு முஸ்லிமா அல்லது முஸ்லிமல்லாதவரா? என்று கேட்டு விட்டு 'ஒரு முஸ்லிம் ஒரு நாற்றை நட்டிருந்தால் அல்லது விவசாயம் செய்திருந்து அதிலிருந்து ஒரு மனிதனோ மிருகமோ எதுவோ சாப்பிட்டிருந்தாலும் அது அவருக்கு ஸதகா செய்த நன்மையை தரும்' என்றுள்ளார்கள்.

**(ஆதாரம்: முஸ்லிம்)**

**அஷ்ஷெய்க் யூ.கே. றமீஸ் எம்.ஏ (சமூகவியல்)**

இதுபற்றி இமாம் ஸரக்ஷி (ரஹ்) அவர்கள் 'இந்த ஹதீஸ் விவசாயம் செய்தல், மரங்களை நடுதல் தொடர்பாகத் தூண்டியுள்ளது. இதற்கான வெகுமதி மறுமையில் நிச்சயமாக கிடைக்கும்' என்றுள்ளார்.

**(ஆதாரம்: அல் மப்ஸூத்)**

'உங்களில் ஒருவருடைய கையில் ஒரு நாற்று இருக்கின்ற நிலையில் மறுமை வந்து விட்டால் கூட அதனை நட்டிவிட்டு எழுந்திருக்க முடியுமென்றால் அவ்வாறு செய்யுங்கள்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம்: அஹ்மத், புகாரி அதபுல் முப்ரத்)**



இதுபற்றி இமாம் முனாவி (ரஹ்) அவர்கள் 'இந்த ஹதீஸ் மரம் நடுவதை உயர்ந்தபட்ச நிலையில் தூண்டுகிறது. இப்பூமி இறுதி வரை உயிரோட்டமாக இருக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகிறான். முன்சென்றவர்கள் பயிரிட்டவற்றிலிருந்து நீ பயன் பெறுவது போன்று பின்னால் வருபவர்கள் பயனடையும் விதமாக விட்டுச்செல்லவும் வேண்டும். இவ்வாறு செய்யாதபோது உலகில் சொற்ப நீரே மிஞ்சிவிடும். இது பற்றற்ற வாழ்வு என்ற கருத்தியலுடன் முரண்படுவதில்லை' என்று குறிப்பிடுகிறார்.

மறுமை வந்த விட்ட நிலையில் மரம் நடுவதன் மூலம் குறித்த நபரோ பிற நபர்களோ பயனடையப் போவதில்லை. எனினும் மரம் நட இங்கு தூண்டப்பட்டுள்ளது. இது உண்மையில் செயல்படுவதற்கான உச்சபட்ச ஊக்குவிப்பாகும். இது பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருப்பவன் செய்ய வேண்டிய ஒரு வணக்கமுமாகும்.

மரங்களை நடுவது மரணத்தின் பின்னரும் பயனளிக்க கூடியது என்று நபி(ஸல்) அவர்கள் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள். 'ஏழு விடயங்கள் காணப்படுகின்றன. அவை மரணத்தின் பின்னரும் பயனளிக்கிறது. அறிவை கற்பித்தல், நதியொன்றை உருவாக்குதல், ஒரு கிணற்றை தோண்டுதல், பேரீச்சை மரமொன்றை நடுதல், ஒரு பள்ளிவாசலை கட்டுதல், ஒரு அல் குர்ஆனை விட்டுச்செல்லல், பாவமன்னிப்பு கோருகின்ற ஒரு பிள்ளையை விட்டுச்செல்லல் ஆகியனவாகும். **(ஆதாரம்: ஸஹீஹுல் ஜாமிஃ)**

மேலும் இஸ்லாமிய அறிஞர்களும் விவசாயம் தொடர்பில் சிலாகித்துக் கூறியுள்ளார்கள். அந்தவகையில் அலி(ரழி) அவர்களிடம் ஒருவர் வந்து 'நான் ஒரு பாழடைந்த பூமிக்கு சென்றேன். அங்கிருந்தவர்கள் எதுவும் செய்யாது இருந்தார்கள். நான் ஒரு ஆற்றை உருவாக்கி விவசாயம் செய்தேன்' என்றார். அதற்கவர் 'நீங்கள் சீர்திருத்தம் செய்பவர் பாழ்படுத்தபவர் அல்லர், வளப்படுத்துபவர் நாசமாக்குபவர் அல்லர்' என்று குறிப்பிட்டார்கள்.

இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்கள், தனது முஹல்லா என்ற நூலில் இது பற்றி குறிப்பிடும் போது 'மதீனாவை சேர்ந்த அனைத்து அன்ஸாரி தோழர்களும், பனூ குறைழா வெற்றியின் போது நிலத்தை பெற்ற அனைத்து ஸஹாபிகளும், மக்காவிலிருந்து புலம்பெயர்ந்து வந்து நிலத்தை பெற்றவர்களும் நபி(ஸல்) அவர்களின் முன்னிலையிலேயே விவசாயம் செய்தார்கள். அது போன்றே இஸ்லாத்தை ஏற்றிருந்த பஹ்ரைன், ஓமான், யெமன், தாயிப் வாசிகளும் விவசாயம் செய்தார்கள் என்று பதிந்துள்ளார்கள் (8/210)

அதேநேரம், தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் (ரழி) அவர்கள் மதீனாவில் கோதுமை பயிரிடப்படுவதை ஆரம்பித்து வைத்துள்ளார்கள். சுமார் இருபது ஒட்டகைகளில் நீர் கொண்டு வரப்பட்டது. மதீனாவில் அவரது குடும்பத்துக்கு ஒரு வருடத்துக்கு தேவையான உற்பத்தியை மேற்கொள்வார்கள். **(இப்னு அஸாகிர், தாரீகு மதீனதி திமிஷ்க் 25/103)**

உழைப்புகளில் மிகவும் சிறந்தது விவசாயம் என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள். இமாம் மாவர்தி (ரஹ்) அவர்கள் இதுபற்றி கூறும்போது 'உழைப்புகளின் அடிப்படை விவசாயம், வியாபாரம், கைத்தொழில்களாகும். ஆனால் விவசாயம்தான் சிறந்தது என்று நான் கருதுகின்றேன். இதுவோ தவக்குல் என்ற பொறுப்பு சாட்டுதலுக்கு மிக நெருக்கமானதாகும். (ஆதாரம்: மஜ்முஃ ஷரஹில் முஹத்தப், 9ஃ59, இமாம் நவவி)

கரங்களால் உழைத்து உண்பதுவே மிக சிறந்த உணவாகும். விவசாயம் செய்வது மிக சிறந்த உழைப்பாக விளங்குகின்றது. அத்துடன் இதில் இமாம் மாவர்தி (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டது போன்று தவக்குல் காணப்படுகிறது. மேலும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பயன்களும் காணப்படுகின்றன. அவற்றை யாராவது சாப்பிட்டால் அவருக்கு கூலியும் கிடைக்கிறது என்று இமாம் நவவி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே விவசாயம் என்பது நாட்டினதும் மக்களதும் முன்னேற்றத்திலும் பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்வதிலும் பெரும் பங்கையாற்றக்கூடியது என்பதை இஸ்லாம் தெளிவாக எடுத்தியம்பியுள்ளது என்றால் அது மிகையாகாது. அதனால் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையில் ஆர்வமும் அக்கரையும் கொள்வோம்.

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# உலோபித்தனத்தின் விபரீதங்கள்

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள் 'கஞ்சனுக்கும் தர்மம் செய்பவனுக்கும் உதாரணம் இரண்டு மனிதர்களைப் போன்றதாகும். மார்பிருந்து கழுத்து வரை இரும்பு அங்கிகளை அவ்விருவரும் அணிந்திருக்கின்றனர். தர்மம் செய்பவர் தர்மம் செய்யும் போதெல்லாம் அவரது அங்கி உடல் முழுவதும் விரிந்து விரல்களை மறைத்துக் கால்களை மூடி, தரையில் இழுபடுமாறு விரிவடையும். கஞ்சன் செலவு செய்யக் கூடாது என்று எண்ணும் போதெல்லாம் அங்கியின் ஒவ்வொரு வளையமும் அதற்குரிய இடத்தை நெருக்கும். அவன் அதை விரிக்க முயன்றாலும் விரியாது' **(ஆதாரம்: புகாரி)**

இன்று உலகில் கண்கூடாகப் பார்க்கக்கூடிய உண்மையை நபி (ஸல்) அவர்கள் அன்றே உதாரணமிட்டுக் கூறியுள்ளார்கள். திருடர்கள், கொள்ளையர்கள், பணத்துக்காகக் கொலை செய்பவர்கள் உருவாவதற்குக் காரணம் ஏழைகளுக்கு உதவாமல் செல்வத்தைச் சேமித்து வைத்து, கஞ்சத்தனம் செய்பவர்கள் தான் என்பது ஆய்வுகளிலும் கூட சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. செல்வந்தர்கள் செல்வத்தைச் சேமித்து, தாங்கள் மட்டும் சுகபோகமாக வாழ விரும்புகிறார்கள். ஆனால் அது அவர்களின் உயிருக்கே உலை வைத்து விடுகின்றது. இதற்கு இரும்பு அங்கி நெறிப்பதை அழகிய உதாரணமாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். தர்மம் செய்யும் எவரும் எதுவுமற்ற கையரு நிலைக்கு செல்வது கிடையாது. மாறாக அவரது செல்வம் அதை விடவும் வளர்ச்சி பெறும் என்பதையும் இந்நபிமொழி சுட்டிக்காட்டுகிறது.

மற்றொரு தடவை ரஸூல் (ஸல்) அவர்கள், 'நீங்கள் கஞ்சத்தனம் செய்வதைப் பயந்து கொள்ளுங்கள். அது தான் உங்களுக்கு முன் சென்றவர்களை அழித்தது. தங்களில் உள்ளவர்களை தாங்களே கொலை செய்வதற்கும் ஹராமானவைகளை ஹலாலாக்குவதின் பக்கம் அவர்களைக் கொண்டு சேர்த்ததும் இக்கஞ்சத்தனம் தான் என்றுள்ளார்கள்.

**(ஆதாரம்: முஸ்லிம்)**

கஞ்சத்தனம் செய்பவர்கள் பல விதமான தீய காரியங்களில் ஈடுபடவும் தயங்க மாட்டார்கள். அதனையும் இந்நபிமொழி எடுத்தியம்புகிறது.

'அல்லாஹ் ஒருவருக்கு செல்வத்தைக் கொடுத்து, அதற்குரிய ஸக்காத்தை அவர் கொடுக்கவில்லை என்றால் மறுமை நாளில் அவரது செல்வம் கொடிய விஷப் பற்களுடைய பாம்பாக மாற்றப்படும். அவரை அது சுற்றிக் கொண்டு அவருடைய தாடையை பிடித்து 'நான் உனது செல்வம், உனது கருவூலம்' என்று சொல்லும்' என்று கூறிவிட்டு, 'கஞ்சத்தனம் செய்பவர்கள் அது தங்களுக்கு நல்லது என்று நினைக்க வேண்டாம். மாறாக அவர்களுக்குத் தீமையே! மறுமை நாளில் தாங்கள் கஞ்சத்தனம் செய்தது அவர்களுக்குத் தொங்க விடப்படும். வானங்கள் பூமியின் உரிமை அல்லாஹ்வுக்கு உரியது. அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கறிந்தவன்' (3:180) என்ற அல் குர்ஆன் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

**(ஆதாரம்: புகாரி)**

இந்நபிமொழியின் படி கஞ்சத்தனம் செய்பவர் இவ்வுலகிலும் மறுமையிலும் நிம்மதியற்றவனாக இருப்பான் என்பது தெளிவாகிறது. ஆனால் தர்மம் செய்பவனுக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் அதிக நன்மைகள் கிடைக்கப்பெறவே செய்யும்.

அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் அவர்கள், 'தான் சம்பாதித்தவற்றில் நல்ல முறையில் ஒரு பேரீச்சம் பழம் அளவு தர்மம் செய்பவரின் தர்மத்தையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதில்லை. உங்களில் ஒருவர் தன் ஒட்டகக்குட்டியை வளர்ப்பதைப் போன்று தர்மம் செய்பவருக்கு அது ஒரு மலையைப் போன்றாகும் அளவுக்கு அல்லாஹ் அதை தன் வலக்கரத்தால் ஏற்று வளர்க்கிறான்' என்று கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம்: புகாரி)**

தர்மம் செய்பவன் வாரி வழங்குவதால் பிச்சைக்காரனாக மாட்டான். மாறாக அவனுக்கு செல்வம் மலை போன்று குவியும் இதனை இந்நபிமொழி எடுத்தியம்புகிறது.

தர்மம் செய்பவர் 'தர்மம்' என்ற வாசலிலிருந்து (சொர்கத்திற்கு) அழைக்கப்படுவார்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம்: முஸ்லிம்)**

**அபூமுஷீரா ...**

தர்மம் செய்பவருக்கு இவ்வுலகில் மாத்திரமல்லாமல் மறு உலகில் சொர்க்கத்திலும் தனி இடம் வழங்கப்படுகிறது. நபி (ஸல்) அவர்களும் தன்னிடத்திலுள்ள செல்வத்தை வாரி வழங்குவதையே அதிகம் விரும்பியுள்ளார்கள். 'என்னிடத்தில் உஹது மலை அளவு தங்கம் இருந்து அதில் ஒரு பொற்காசு கூட எஞ்சியிருந்தாலும் அதை அல்லாஹ்வின் அடியார்களிடம் இப்படி இப்படியெல்லாம் செலவிடாமல் மூன்று இரவுகள் கூட கழிந்து செல்வது எனக்கு மகிழ்ச்சியளிக்காது. கடனை அடைப்பதற்காக நான் எடுத்து வைக்கும் சில பொற்காசுகளைத் தவிர' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

**(ஆதாரம்: புகாரி)**

ஆகவே கஞ்சத்தனம் செய்வதால் இவ்வுலகிலும் மறுமையிலும் எதிர்கொள்ளக்கூடிய விபரீதங்களையும், தர்மம் செய்வதால் கிடைக்கப்பெறும் ஈருலக நன்மைகளையும் இந்நபிமொழிகள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அதனால் கஞ்சத்தனத்தை தவிர்த்து இறைவனின் பாதையில் வாரி வழங்கி இறையருளையும் நன்மைகளையும் அடைந்து கொள்வோம்.

# இறைவனின் திருப்தியை பெற்றுத் தரும் தூய்மை

ஒவ்வொரு மனிதனும் தம் அன்றாட வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தூய்மையைப் பேண வேண்டும் என்பதற்காக நபி (ஸல்) அவர்கள் சிறந்த வழிமுறைகளை கற்றுத் தந்துள்ளார்கள். விஞ்ஞானம் வளர்ந்த இக்கால கட்டத்திலும் கூட பெரிதும் பயன்படக்கூடிய வழிமுறைகள் இவை. இருந்தும் அவற்றின் சிறப்பும் முக்கியத்துவமும் உணரப்படாதுள்ளன.

இதற்கு நிறையவே உதாரணங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் காலையில் தூங்கி எழுந்த உடன் கை கழுவாமல் பல் துலக்காமல் தேனீர் அருந்தும் பழக்கம் இன்று பலரிடம் காணப்படுகின்றன. ஆனால் இப்பழக்கம் நபி (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு முரணானதாகும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'உங்களில் ஒருவர் தன் உறக்கத்திருந்து விழித்துவிட்டால் அவர் தன்னுடைய கையை மூன்று முறை கழுவது அவசியம். ஏனென்றால் அவருடைய கை இரவில் எங்கு இருந்தது என்பதை அவர் அறிய மாட்டார்' என்று கூறினார்கள்.

**(ஆதாரம்: முஸ்லிம்)**

உண்மையில் நாம் உறங்கும் போது சுய நினைவை இழந்து விடுவோம். நம்மை அறியாமல் சிறு பூச்சிகள், எறும்புகள் நம் மூக்கிற்குள் நுழைந்து விடலாம். தூங்கி எழும்போது சளி துண்டுகள் கூட மூக்கில் இருந்து வெளிப்பட்டிருக்கலாம். இப்பின்புலத்தில் தான் நபி (ஸல்) அவர்கள், நீங்கள் தூக்கத்திருந்து எழுந்து உளூ செய்தால் மூன்று முறை (நீர் செலுத்தி) நன்கு மூக்கை தூய்மைப் படுத்திக்கொள்ளுங்கள். ஏனெனில் நீங்கள் (தூங்கும் போது) மூக்கின் உட்பகுதிக்குள் ஷைத்தான் தங்கியிருந்தான்' என்று கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம்: புகாரி)**

இந்நபிமொழியில் நபி (ஸல்) அவர்கள் ஷைத்தான் என்று குறிப்பிடுவது இப்லீஸை அல்ல. மாறாக தீங்கு தரக் கூடிய அசுத்தங்களைத்தான் என்பது இஸ்லாமிய அறிஞர்களது கருத்தாகும். ஷைத்தான் தீங்கு தருவதைப் போன்று இவைகளும் தீங்கு தருவதினால் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

இன்றைய காலகட்டத்தில் தூங்கி எழுந்தவுடன் முகத்தைக் கழுவுவதும் பல்லைத் துலக்குவதும் தான் நம் வழக்கில் உள்ளது.

ஆனால் மூக்கிற்குள் நீர் செலுத்திக் கழுவ வேண்டும் என்பதை நபி (ஸல்) அவர்கள் அன்றே வலியுறுத்தியுள்ளதன் ஊடாக அதன் முக்கியத்துவத்தை எம்மால் புரிந்து கொள்ள முடியும். அதனால் இது ஒவ்வொருவரது வாழ்விலும் உயிரோட்டம் பெற வேண்டிய ஸுன்னாவாக உள்ளது.

இன்றைய நவீன விஞ்ஞானம் பல் துலக்குவதை அதிகம் வலியுறுத்துகிறது. சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் உறங்கச் செல்வதற்கு முன்னும் பின்னும் பல் துலக்க வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் இதனை நபி (ஸல்) அவர்கள் அன்றே எடுத்துக்கூறியுள்ளார்கள்.

'என் சமுதாயத்திற்குச் சிரமமாகி விடும் என்றில்லாவிட்டால் ஒவ்வொரு தொழுகைக்கும் பல் துலக்குமாறு நான் கட்டளை இட்டிருப்பேன்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். **(ஆதாரம்: புகாரி)**

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் பால் பருகிய பின்னர் வாய் கொப்புளித்து விட்டு, அதில் கொழுப்பு உள்ளது என்றுள்ளார்கள். **(ஆதாரம்: புகாரி)**

இதன்படி தன்னுடைய உடலைப் பாதுகாப்பதற்காக மாத்திரமல்லாமல் இறைவனுடைய பொருத்தத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பல் துலக்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. தூய்மை இறைவனது திருப்திக்கும் தூய்மையின்மை அவனது அதிருப்திக்கும் காரணம் என்பதை பின்வரும் ஹதீஸ் எடுத்துரைக்கிறது. 'பல் துலக்குவது வாயைத் தூய்மைப்படுத்தும். இறைவனின் பொருத்தத்தைப் பெற்றுத்தரும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**(ஆதாரம்: நஸாயீ)**

மேலும் சூடான பானம் ஏதும் அருந்தும் போது அதை நாம் ஊதிப் பருகுகிறோம். தண்ணீர் பருகும் போது பாத்திரத்தினுள் மூச்சு விடுகிறோம். இவை தவிர்க்க வேண்டிய செயற்பாடுகளாகும். ஏனென்றால் நாம் சுவாசிக்கும் போது பல வகையான வாயுக்கள் உள்ளே செல்கிறது. நுரையீரல் உடலுக்குத் தேவையான ஒட்சிசனை எடுத்துக் கொண்டு காபனீரொட்சைட்டை வெளியே விடுகிறது. இது கழிவு வாயுவாகும். அதனால் உடலுக்கு எந்தப் பயனும் இல்லை.

இதை நாம் பானத்தில் செலுத்தினால் பானம் அசுத்தமடையும் நிலை ஏற்படும்.அத்தோடு நாம் உள்ளிழுத்தக் காற்று வெளியேறக்கூடிய பாதையான மூக்கும் அசுத்தமானதாகும். இதன் வழியே கடந்து வந்த காற்றை பானத்தில் விடுவது அருவருக்கத்தக்கதாகும். இது போன்ற காரணங்களால் மார்க்கம் பாத்திரத்தில் மூச்சு விடுவதைத் தடை செய்கிறது.

உங்களில் ஒருவர் (எதை) அருந்தினாலும் அந்தப் பாத்திரத்திற்குள் அவர் மூச்சு விட வேண்டாம். கழிப்பிடம் சென்றால் ஆண் குறியை தமது வலக் கரத்தால் தொடவோ தூய்மைப்படுத்தவோ வேண்டாம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம்: புகாரி)**

ஆகவே தனிப்பட்ட வாழ்வில் சுத்தமாகவும் தூய்மையாகவும் இருப்பது இறை திருப்தியைப் பெற்றுத்தரக்கூடியதாகும். அவற்றின் ஊடாகவும் அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றிட முயற்சிப்போம்.


**அப்துல்லாஹ் ...**



# புலமைக் கதிர்

## தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

1. இங்குள்ள உருக்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம். சரியான தொடர்புள்ள கூட்டங்களைக் காட்டும் விடையைத் தெரிக.

A B C D




i. AB, CD ii. AC, BD iii. BC, AD

2. ஒரு தொடர்புக்குள் அமையாத உருவின் கீழ்க் கோடிடுக.



i. ii. iii.

3.




i. 15 ii. 17 iii. 18

4. இப்படத்துடன் தொடர்புடைய மிகப் பொருத்தமான கருத்து



i. துரித தகவல் பரிமாற்றம்
ii. ஆடம்பர தேவை
iii. இலகுவாக கையாளுதல்


5. மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் யாவரும் கட்டாயமாக தலைக்கவசம் அணிய வேண்டும் என்பதற்கான காரணமாக அமைவது.
i. தலைக்கவசம் அணிவதனால் அழகு பெறலாம்
ii. தலைக்கவசம் அணிய வேண்டியது வீதி விதிமுறை
iii. தலைக்கவசம் பாதுகாப்பு அளிக்கும்.

6. சம்பவம் ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றினை சரியாக காட்டும் ஒழுங்கு முறையுள்ள விடையின் கீழ்க் கோடிடுக.
1) ஓடிச் சென்று வெளியே பார்த்தேன்.
2) கடிதத்தை வாங்கிப் பிரித்தேன்.
3) டிங் டிங் என மணியொலி கேட்டது.
4) தபாற்காரன் கடிதத்துடன் நின்றார்.

i. 3, 4, 1, 2 ii. 3, 1, 2, 4 iii. 3,1, 4, 2

7. 1918 இது எத்தனையாம் நூற்றாண்டு, எத்தனையாம் தசாப்தம்
i. 20ம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்
ii. 20ம் நூற்றாண்டு முதலாம் தசாப்தம்
iii. 19ம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்

8.



உருவில் நிழற்றப்படாத பகுதியின் முழு உருவத்தில் என்ன பங்கு?
i. 1/8
ii. 4/5
iii. 7/8

9. 400 ரூபாவில் 3/8 பங்கு எவ்வளவு?
i. 100 ரூபாய் ii. 150 ரூபாய் iii. 200 ரூபாய்


10. வைக்கோல் - கடதாசி போல
i. ஆடை – அலங்காரம்
ii. ஆணி – சுத்தியல்
iii. பருத்தி – ஆடை

11. கடையொன்றில் 36 தேங்காய்கள் இருந்தன. அவற்றில் 2/6 பகுதி விற்கப்படவில்லை. எனவே விற்கப்பட்ட தேங்காய்கள் எவ்வளவு?
i. 24 ii. 26 iii. 30

12. மூன்று மனிதர்கள் ஒரு வேலையை செய்து முடிப்பதற்கு ஆறு நாட்கள் தேவை எனில் ஆறு மனிதர்கள் அதே வேலையை செய்து முடிக்க எத்தனை நாட்கள் தேவை?
i. 2 நாட்கள் ii. 3 நாட்கள் iii. 4 நாட்கள்

13. 3cm பக்க அளவுடைய சதுர அட்டைகளைப் பயன்படுத்தி 9cm பக்க அளவுடைய சதுரமொன்றை ஆக்குவதற்கு தேவையான சதுர அட்டைகள் எத்தனை?
i. 12 ii. 10 iii. 9

14. இதிலுள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?



i. 9
ii. 10
iii.14

15. பசு, யானை, எறும்பு, பல்லி, பூனை இவற்றை பருமன் அடிப்படையில் ஒழுங்குபடுத்தினால் நடுவில் வருவது?
i. பூனை ii. பசு iii. யானை


16. கீழுள்ள இலக்கங்களில் எவ்விரண்டு இலக்கங்களை கூட்டும் போது பெறப்படும் விடையானது அவ்விரண்டு இலக்கங்களைப் பெருக்கும் போது கிடைக்கும் விடையை விட குறைவானதாகும்?
i. 4, 3 ii. 2, 1 iii. 2, 2

17. தருஜனிடம் 10 ரூபாய், 5 ரூபாய் என மொத்தம் 16 நாணயங்கள் உள்ளன. இந்த நாணயங்களின் மொத்த பெறுமதி ரூபாய் 95.00 எனில் அவனிடம் உள்ள 10 ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?
i. 6 ii. 5 iii. 3

18. ஒரு மாம்பழத்தினையும் அதன் நான்கு மடங்கு பெறுமதியுள்ள அன்னாசிப் பழத்தினையும் வாங்க தேவையான பணம் ரூபாய் 200.00 எனில் அன்னாசிப் பழமொன்றின் விலை யாது?
i. ரூபாய் 160.00 ii. ரூபாய் 140.00 iii. ரூபாய் 120.00

19. ஒரு பெட்டியில் 12 பந்துகளை அடுக்கலாம் எனில் 72 பந்துகளை எத்தனை பெட்டிகளில் அடுக்கலாம்?
i. 6 ii. 8 iii. 10

20.



இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
i. 4
ii. 5
iii. 6

21. கறையான், கிளி என்பனவற்றின் வாழ்விடங்கள் முறையே
i. வளை, பொந்து ii. புற்று, கூடு iii. புற்று, பொந்து

22. ஒரு முட்டையின் விலை 25 ரூபாய் எனில் 160 ரூபாய் வைத்திருக்கும் வர்சானுக்கு 8 முட்டைகள் வாங்க இன்னும் எவ்வளவு பணம் வேண்டும்?
i. ரூபாய் 20.00 ii. ரூபாய் 30.00 iii. ரூபாய் 40.00

23. 28m நீளமும் 16m அகலமுள்ள செவ்வக வடிவத்தை சதுரமாக மாற்ற அதன் நீளத்திலிருந்து எவ்வளவு மீற்றர் வெட்டி அகற்ற வேண்டும்?
i. 10m ii. 12m iii. 14m

24. அபிமன்யு நாளை மறுநாள் திங்கட்கிழமையன்று கணித பரீட்சை நடைபெறும் எனக் கூறினான். அப்படியாயின் நேற்று என்ன கிழமை?
i. வெள்ளிக்கிழமை ii. சனிக்கிழமை iii. வியாழக்கிழமை

25. ஒரு கடிகார முகத்தில் செங்கோணங்கள் உருவாகும் சந்தர்ப்பங்கள்
i. 3 மணி, 9.30 மணி ii. 3 மணி, 9 மணி
iii. 3 மணி, 3.30 மணி

26. இரண்டாயிரத்து முப்பது என்ற எண்ணுடன் இரண்டாயிரத்து இருபத்தைந்து என்ற எண்ணைக் கூட்டினால்
i. 4055 ii. 4030 iii. 4025

27. சார்திக்கின் வயதின் காற்பங்கு நவிக்சனின் வயது ஆகும். நவிக்சனின் வயது 6 எனில் இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?
i. 24 ii. 26 iii. 30

28. 2 லீற்றர் பாலை 5 மாணவர்கள் சமமாக பகிர்ந்து அருந்தினார்கள். ஒரு மாணவன் அருந்திய பாலின் அளவு யாது?
i. 500 ml ii. 400 ml iii. 250 ml


29. எந்த எண்ணின் ஏழு மடங்குடன் எட்டைக் கூட்டினால் 85 ஆகும்?
i. 9 ii. 10 iii. 11

30. ஜனவரி மாதம் முதலாம் திகதி புதன்கிழமை எனில் அதே மாதத்தின் 29ம் திகதி என்ன கிழமை?
i. திங்கட்கிழமை ii. செவ்வாய்க்கிழமை iii. புதன்கிழமை

31. பிற்பகல் 5.05 இதனை நியம நேரமாக எழுதினால்
i. 17:05 ii. 05:05 iii. 17.05

32. ஒரு புத்தகத்தில் 20ம் பக்கம் முதல் 39ம் பக்கம் வரை எண்ணினால் எத்தனை பக்கங்கள் வரும்?
i. 19 பக்கங்கள் ii. 20 பக்கங்கள் iii. 21 பக்கங்கள்

33. இத்திண்ம உருவத்திலுள்ள உச்சி மற்றும் விளிம்புகளின் எண்ணிக்கை முறையே




i. 1, 2
ii. 2, 2
iii. 1, 1

34. ஒருவருக்கு 4 வீதம் 484 பென்சில்களை எத்தனை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கலாம்?
i. 121 ii. 211 iii. 112

35. 3750 ml பாலையும் 1250 ml பாலையும் ஒன்றாக சேர்த்தால் வருகின்ற விடையை லீற்றரில் தருக.
i. 40 *l* ii. 5 *l* iii. 400 *l*

36. இச்சதுரமுகிக்கு ஆறிற்கு எதிரேயுள்ள இலக்கம் எது?




i. 1 ii. 2 iii. 5

37. துணியொன்றினை வெயிலில் உலர்த்த 5 நிமிடங்கள் தேவைப்படுகிறது. அதேபோல் 4 மடங்கு துணிகளை ஒரே நேரத்தில் உலர்த்தினால் எவ்வளவு நிமிடங்கள் தேவை?
i. 20 நிமிடங்கள் ii. 4 நிமிடங்கள் iii. 5 நிமிடங்கள்

38. ஒலிம்பிக் போட்டி 4 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும். 10 ஆவது ஒலிம்பிக் போட்டி 2020ம் ஆண்டு நடைபெற்றதாயின் 16 ஆவது ஒலிம்பிக் போட்டி எந்த ஆண்டு நடைபெறும்?
i. 2024 ii. 2034 iii. 2044

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்


## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

39.

| 412 | | 421 |
|---|---|---|
| | 241 | |
| 214 | | 142 |

இவ்வெண்களை ஏறுவரிசைப்படுத்தினால் நடுவில் வரும் எண் எது?
i. 241
ii. 214
iii. 412

40. பின்வருவனவற்றுள் வளை கோடுகளை கொண்டிராத உரு
i. ii. iii.



## வினாத்தாள் ii இற்கான விடைகள் (03.06.2022)

I. 1) அதிகாலை 2) குழந்தைகள் 3) நித்திரைவிட்டு எழுவாய்
4) கண் 5) நீ 6) (i) தூக்கம் (ii) விழி
II. 7) நாங்கள் பாடம் படித்தோம்
8) காகங்கள் கூடு கட்டின
9) அவர்கள் பந்து அடித்தார்கள்
III. 10) குறத்தி 11) உழத்தி
IV. 12) கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு
13) இன்று காலையில் இடியுடன் கூடிய மழைபெய்யும்
V. 14) குஞ்சு 15) பிள்ளை
VI. 16) கசக்கிக் கட்டு 17) நட்டம்
VII. 18) (i) நாங்கள் விளையாடுவோம் (ii) இவர் எனது அப்பா

19) (i) Fish (ii) Aeroplane
20) 24
21) (i) 6, 12 (ii) 9, 18
22) (i) 999, 1001
(ii) 2499, 2501
23) (i) மேற்கே (ii) தெற்கே (iii) கிழக்கே
24) 20
25) 5000 cm
26) மூன்று
27) 10
28) மூன்று

29) நான்கு
30) 1
31) 2
32) 2
33) 3
34) 1
35) 3
36) 1
37) 3
38) 1
39) 2

40) 3
41) 1
42) 1
43) 2
44) 3
45) 2
46) 1
47) 2
48) 1
49) 1
50) 3

51) 2
52) 3
53) 2
54) 3
55) 1
56) 3
57) 3
58) 1
59) 3

## மரபுப் பெயர்கள்

- ★ ஆடு மேய்ப்பவன் - இடையன்
- ★ வாகனம் செலுத்துபவன் - சாரதி
- ★ தேர் செலுத்துபவன் - பாகன்
- ★ விமானம் செலுத்துபவன் - வலவன்/ விமானி
- ★ கட்டட வேலை செய்பவன் - கொத்தன்
- ★ கப்பல் ஓட்டுபவன் - மாலுமி/ மீகாமன்
- ★ யானையை பராமரிப்பவன் - பாகன்

## சொற்களைச் சேர்த்து எழுதுவோம்

(1) தென்னை + ஓலை = தென்னோலை
(2) குரல் + ஓசை = குரலோசை
(3) மா + இலை = மாவிலை
(4) ஆல் + இலை = ஆலிலை
(5) கடல் + ஓரம் = கடலோரம்
(6) பலா+ இலை = பலாவிலை
(7) பனை + ஓலை = பனையோலை
(8) பட்டு + ஆடை = பட்டாடை
(9) கடல் + அலை = கடலலை
(10) மீன் + இனம் = மீனினம்
(11) மண் + அரிப்பு = மண்ணரிப்பு
(12) வான் + ஒலி = வானொலி
(13) தேன் + அமுது = தேனமுது
(14) மலை + ஓரம் = மலையோரம்
(15) புற்று + ஈசல் = புற்றீசல்
(16) குயில் + ஓசை = குயிலோசை
(17) சாக்கு + ஓட்டம் = சாக்கோட்டம்
(18) விளக்கு + ஏற்றி = விளக்கேற்றி
(19) உள்ளம் + உருகி = உள்ளமுருகி
(20) வீடு + கூரை = வீட்டுக் கூரை

## துடுப்பைப் பயன்படுத்தி விளையாடப்படும் விளையாட்டுகள்


கிரிக்கட்


ஹொக்கி


எல்லே


பூப்பந்து


மேசைப்பந்து


டென்னிஸ்



கோல்ப்


பேஸ்போல்

## எமது சூழலில் நாம் காணும் தாவரங்கள்



முடிதும்பை


சதைகரைச்சான்


நன்னாரி


தேங்காய்ப்பூ கீரை


இஞ்சி


எருக்கு


குப்பைமேனி


அடம்பன்கொடி

# அரியாலை, நீர்வேலி, வரணி ஆலயங்களில் இன்று நாவலர் பெருமான் சொற்பொழிவுகள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக, யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்கள் (ரொறன்ரோ, கனடா)அனுசரணையுடனும், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பிலும் நடைபெற்று வருகின்றன.

24 ஆவது சொற்பொழிவு நிகழ்வு அரியாலை நீர்நொச்சி தாழ்வு சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நகுலா ரபேந்திரராசா தலைமையில் நடைபெறுகிறது.

நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து,'நாவலரே நமக்கான அடையாளம்' எனும் தொனிப்பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் சொற்பொழிவு நிகழ்த்துகிறார். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப் படவுள்ளன.



இதேவேளை யாழ் நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இன்று மாலை 5.00 மணிக்கு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து நடைபெறும். ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார். சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் 'தருமம் என்று ஒரு பொருள் உளது' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

இதேவேளை தென்மராட்சி வரணி மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் சுவாமி கோயில் வருடாந்த மணவாளக்கோலத் திருவிழாவை முன்னிட்டு குருநாதர் சுவாமி, ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் கிராம வலப்பிரவேசமும் சிறப்புச்சொற்பொழிவும் வரணி மாசேரி திருவருள்மிகு விக்கிரமாகுளப் பிள்ளையார் கோயிலில் இன்று மாலை 8.00 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சி.கா.கமலநாதன் தலைமையில் நடைபெறுகிறது. சைவப் புலவர் பிரசங்கபூஷணம் செ.கந்தசத்திய தாசன் 'நாவலர் பாரம்பரியத்தில் திருவுலாவில் திருமுறை பாடுவோம்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். தொர்ந்து நடன நிகழ்வும், வரணியூர் சைவப்புலவர் கா.கமலநாதன்வழங்கும் 'சண்டேஸ்வரர் நாராயனர்' சிறப்பு வில்லிசையும் இடம்பெற்று எழுந்தருளலுடன் நிகழ்வுகள்நிறைவடையும்.

அ.கனகசூரியர்...

# மக்கள் உள்ளங்களை வென்ற அரசியல்வாதி அட்டாளைச்சேனை மசூர் சின்னலெவ்வை



கிழக்கு மாகாண சபையின் முன்னாள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினரும், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான மர்ஹூம் மசூர் சின்னலெவ்வை அவர்களின் மறைந்து பத்து வருட நினைவு கடந்த 22. 05. 2022 அன்று அனுஷ்டிக்கப்பட்டது. அவர் 2012.05.22 ஆம் திகதி மரணமடைந்தார்.

அரசியல் அதிகாரத்தின் மூலம் மக்களுக்கு தன்னால் முடிந்த உதவிகள் வழங்குவதை இலட்சியமாகக் கொண்டு அன்னார் செயற்பட்டார். அன்னார் இவ்வுலகை விட்டு மறைந்து 10 வருடங்கள் நிறைவடைந்தாலும், அவரது

### அன்னார் மறைந்து பத்து வருடங்கள் நிறைவு

அவரைச் சுற்றி எப்போதும் ஒரு நட்பு வட்டமிருக்கும். எல்லோருடனும் அன்பு பாராட்டி, நட்புடன் பழகும் தாராள குணத்தை இயல்பாகக் கொண்டவர். தன்னால் முடிந்தளவு உதவிகளை ஏனையவர்களுக்கு உதவுபவராக அவர் மிளிர்ந்தார்.

1955ம் ஆண்டு அட்டாளைச்சேனையில் பிறந்த மசூர் சின்னலெவ்வை, தனது 39 ஆவது வயதில் ஐ.தே.கட்சியினூடாக அரசியலுக்குள் நுழைந்தார். ஆரம்பத்தில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரானார். பின்னர் அதேபிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவாகி பணி தொடர்ந்தார். அதன் பின்னர், முதலாவது கிழக்கு மாகாண சபையின் உறுப்பினராகத் தெரிவானார். மசூர் சின்னலெவ்வை ஐ.தே.கட்சியின் அட்டாளைச்சேனைப் பிரதேச அமைப்பாளராகவும், இலங்கை போக்குவரத்துச் சபையின் கிழக்கு மாகாண நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் பதவி வகித்துள்ளார். இந்தப் பதவிகளின் மூலம், இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தார். அவர் பின்னர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசில் இணைந்து கொண்டார்.

அன்னாரின் தந்தையும் ஓர் அரசியல்வாதி ஆவார். 'சின்னலெவ்வை சேர்மன்' என்றால், மசூரின் தந்தை யாரை ஊரறியும். பின்னாளில் தந்தை போன்றே தனயனும் அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவானார். மறைந்த மசூர் சின்னலெவ்வை யின் பெயரில் அட்டாளைச்சேனை சந்தைச் சதுக்கத்தில் புதிய மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டு அன்னாருக்கு கௌரவமளிக்கப்பட்டது.

ஐ.எல்.எம்.றிஸான்...
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# இனவாத சிந்தனையற்ற அரசியல் தலைவராக பணியாற்றியவர் கலாநிதி என்.எம்.பெரேரா

கலாநிதி என்.எம். பெரேராவின் 117 ஆவது பிறந்த தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை கொட்டா வீதி என்.எம்.பெரேரா நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இங்கு உரையாற்றிய கலாநிதி நல்லையா குமரகுருபரன், "வரலாற்றில் அவரது கருத்துகள் இனவாதமற்றவை.ஆனால் இனவாத தேசிய கட்சிகள் என். எம். பெரேராவின் கருத்தை நிராகரித்தன.



அவர் உத்தியோக பூர்வ மொழிச் சட்டத்தின் வலுவான எதிர்ப்பாளராக இருந்தார், அவர் பழைய டவுன் ஹோலில் கூட்டத்தில் உரையா ற்றிக் கொண்டிருந்த போது மேடையில் வெடிகுண்டு வீசப்பட்டது. அவர் தாக்குதலிலிருந்து தப்பினார்" என்று குறிப்பிட்டார் . "1978 அரசியலமைப்பை விமர்சித்த அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினால் பிரதமர் தலைமையிலான பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நிரந்தர மோதலுக்கு வழிவகுக்கும் என்று தெரிவித்தார். இருவரும் வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருந்தால் விளைவு மோசமாக இருக்கும் என்றும் அவர் விமர்சித்தார். ஐக்கிய தேசியக் கட்சி / ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் கீழ் இலங்கையின் ஆட்சி இன்று முறிந்தது. இங்கேயும் அவர்தம் யதார்த்தம் கண்டோம் .

இந்த இடத்தில் அவரது சக பாடியான கலாநிதி கொல்வின் R .D சில்வாவையும் குறிப்பிட வேண்டும். அவர் அன்று சொன்னார் 'ஒரு மொழி இரு நாடு, இரு மொழி ஒரு நாடு' என்று. சிங்கள அரச மொழி சட்டம் இந்நாட்டுக்கு ஒத்து வராது என்றார் அவர். அந்த யதார்த்தத்தை 30 ஆண்டுகால போராட்டத்தினூடாக கண்டோம் என்றார். அந்த வகையில் தமிழராக நாம் அவரை நினைவு கூர முடியும்" என்றும் கலாநிதி குமாரகுருபரன் தனதுரையில் குறிப்பிட்டார் .

டியூ குணசேகர, ஆனந்தசங்கரி,கலாநிதி குமரகுருபரன், பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் இடதுசாரி தொழிற்சங்க தலைவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர் .

கேகாலை மாவட்டத்தில் 1934 ஆம் ஆண்டு மலேரியா பரவிய காலத்திலும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போதும் பெரேரா (சூரியமல் இயக்கத்தின் உறுப்பினராக) ஆற்றிய பணிகள் அப்பகுதியின் ஏழை மற்றும்ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவைப் பெற்றன.

1933 இல் இலங்கை திரும்பிய கலாநிதி என். எம். பெரேரா 1936 இல் ருவன் வெல்ல தொகுதியில் போட்டியிட்டார். அந்த நேரத்தில் யட்டியந்தோட்டை, ருவன்வெல்ல மற்றும் தெரணியகல,கலிகமுவ தேர்தல் பிரிவின் சில பகுதிகளாக இருந்த ருவன்வெல்ல தொகுதியில் ல.ச.ச.க. யில் அவர் போட்டியிட்டார் . என். எம். பெரேரா ருவன்வெல்லவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். LSSP பாராளுமன்றத்தில் 28



### 117 ஆவது பிறந்ததின நிகழ்வில் கலாநிதி குமரகுருபரன் புகழாரம்

ஆசனங்களைப் பெற்று இரண்டாவது பெரிய பிரதிநிதித்துவத்தை பெற்று பெரேராவை எதிர்க்கட்சித் தலைவராக்கியது. அவர் கொழும்பு மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1945க்குப் பிறகு அந்தப் பதவியை வென்ற ஐக்கிய தேசியக் கட்சி அல்லாத அரசியல்வாதி என்.எம். பெரேரா மட்டுமே ஆவார். 1970 பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்ற போது 1970 இல் மீண்டும் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். லண்டன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான அறிவியல் கலாநிதி பட்டம் பெற்ற முதல் இலங்கையர் என்.எம். பெரேரா ஆவார்.

# தினகரன் — கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## மீட்டுக்கொள்ளப்படாத அடகு நகைகளின் பிரசித்த ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட வடமேல் மாகாண கூட்டுறவு கிராமிய வங்கி சங்கத்தின் முகவர்களாகப் பணியாற்றும் வரையறுக்கப்பட்ட அளவ்வ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அளவ்வ அடகுப் பிரிவு, ஹும்புளுவ, உடுமுல்ல நவதல்வத்த, மடவல, வில்கமுவ, மஹரச்சிமுல்ல, போயவலான, பம்பதெனிய, கல்கமுவ, பொரமடல, புஜ்ஜொமுவ வளகும்புர மற்றும் அப்போவ, கந்தெகெதர ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2021.04.30 வரை அடகு வைத்து 2022 ஏப்ரல் 30 வரை மீட்டுக்கொள்ளப்படாத அடகு நகைகள் 2022 ஜூலை 30, 31 ஆகிய தினங்களில் மு.ப. 10.00 இற்கு வரையறுக்கப்பட்ட அளவ்வ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான அலுவலக மாநாட்டு மண்டபத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்,**
**வரையறுக்கப்பட்ட அளவ்வ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**நாரம்மல வீதி, அளவ்வ**
**037-2278131**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## afc — தங்கக் கடன் சேவை / தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.03.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 28.06.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை

**ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:**
**722, கோட்டை வீதிஇராஜகிரிய**
**28.06.2022**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 — 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

**அடகுச் சேவைத் தலைவர்**
**எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ**
**722, கோட்டை வீதிஇராஜகிரிய**
**தொலை : 0115 573600**

## NLDB — தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்தி சபை

### பெறுகை அறிவித்தல்

கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்திச் சபையின் பண்ணைகளுக்காக பதனிடப்பட்ட விலங்குணவை வழங்குவதற்காக 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்குணவு சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற விலங்குணவு உற்பத்தியாளர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

**1. விலங்குணவு**

மேல்நாட்டு பண்ணைகளுக்கானது – 2022 ஜூலை 1ஆம் திகதியிலிருந்து 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையுமான காலப்பகுதிக்கு.

| பண்ணை | உணவின் இனம் | அளவு | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|
| போப்பத்தலாவ, டயகம, மெனிக்பாலம | பாற் பசுக்களுக்கான உணவு - இனம் 1 | 695.34 | 938,709.00 |
| | பாற் பசுக்களுக்கான உணவு - இனம் 1I | 384.63 | 380,783.00 |
| | Calf Starter Feed | 25.27 | 42,959.00 |

**பிராந்தியம் 1 -** ஏனைய விலங்கு பண்ணைகள் - 2022 ஜூலை 1 ஆம் திகதியிலிருந்து 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையுமான காலப்பகுதிக்கு.

| பண்ணை | உணவின் இனம் | அளவு | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|
| ரொசிட்டா, ஓயபமடுவ, மஹாபெரிய, கொட்டுகச்சிய | பாற் பசுக்களுக்கான திண்ம உணவு (Pelleted Feed) | 270.1 | 248,400.00 |
| | Calf Starter Pelleted Feed | 28.8 | 48,960.00 |

**பிராந்தியம் 2 -** ஏனைய விலங்கு பண்ணைகள் - 2022 ஜூலை 1ஆம் திகதியிலிருந்து 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையுமான காலப்பகுதிக்கு.

| பண்ணை | உணவின் இனம் | அளவு | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|
| கல்பொக்குண, நாரன்கல்ல, ருக்கத்தன்ன, கொவுல்வெவ, சிரிங்கஸ்பாத, ஆண்டிகம, மல்சிரிபுர, பொலொன்னறுவ, பெலிகம, நிக்கவெரட்டிய, வீரவில்ல, மரண்டாவில, MLDC | பாற் பசுக்களுக்கான திண்ம உணவு (Pelleted Feed) | 1558.24 | 1,433,580.00 |
| | Calf Starter Pelleted Feed | 66.67 | 113,339.00 |
| | | | |

விலங்குணவின் தேவைப்படும் அளவு, விபரக்குறிப்புக்கள் மற்றும் விலைமனு நிபந்தனைகள் ஆகியவற்றை தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்தி சபையின் கீழே குறிப்பிட்டுள்ள முகவரியிலுள்ள வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து சாதாரண வேலை நேரங்களில் கோரிக்கைக் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விலைமனுவிற்கும் 5000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணமாக அறவிடப்படும். விலைமனு ஆவணங்கள் 2022 ஜூன் 22 ஆம் திகதியன்று பி.ப. 3.30 மணி வரையும் வழங்கப்படுமென்பதுடன் 2022 ஜூன் 23 ஆம் திகதியன்று மு.ப.10.30 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் மூடப்படும். விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்தி சபையில் திறக்கப்படும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்திச் சபை,**
**இல.: 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05.**
**011 2501701/2, 011 5746308.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை போக்குவரத்து சபை (SLTB)

### மாக்கும்புற மற்றும் கடவத்தைக்கு இடையில் இயக்குவதற்காக நிறுத்திவைத்து சேவையீடுபடுத்தும் நகர பஸ் சேவைகளுக்காக மாதாந்த வாடகை அடிப்படையில் இபோச வுக்கு வளிச்சீராக்கப்பட்ட பஸ்களை வழங்குதல்

1. இபோச இலச்சினையின் கீழ் தனியார் துறையுடன் ஒருங்கிணைந்ததாக மாக்கும்புற கடவத்தைக்கு இடையில் நிறுத்திவைத்து சேவையில் ஈடுபடுத்தும் வளிச்சீராக்கப்பட்ட பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

2. கீழ்க்காணும் நிபந்தனைகளின் கீழ் 2022 ஜூன் 15ம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் 03 மாத காலத்திற்கு மாக்கும்புற மற்றும் கடவத்தைக்கு இடையில் இயக்குவதற்கு நிறுத்திவைத்து சேவையில் ஈடுபடுத்தும் நகர பஸ் சேவைகளுக்காக மாதாந்த வாடகை அடிப்படையில் இபோச வுக்கு வளிச்சீராக்கப்பட்ட பஸ்களை வழங்குவதற்கு விரும்பும் பஸ் உரிமையாளர்/ பஸ் உரிமை கம்பனிகளிடமிருந்து அவசர அடிப்படையில் பொறியிடப்பட்ட விலைமனுக்களை இபோச பெறுகைக் குழுவின் தலைவர் இத்தால் அழைக்கின்றார்

   i. 30 முதல் 35 ஆசனங்கள் கொண்டுள்ள ............... பின்னர் பதிவு செய்யப்பட்ட வளிச்சீராக்கப்பட்ட பஸ்களைக் கொண்டுள்ள பஸ் உரிமையாளர்கள்/ பஸ் உரிமைக் கம்பனிகள் மாத்திரம் பஸ்களை வழங்குவதற்கு தகைமை பெறுவர்.

   ii. மாதாந்த வாடகை அடிப்படையில் இபோச வுக்கு மேலே விபரிக்கப்பட்ட வளிச்சீராக்கப்பட்ட பஸ்களை பஸ் உரிமையாளர்கள்/ பஸ் உரிமைக் கம்பனிகள் வழங்குதல் வேண்டும். அத்துடன் இபோச எரிபொருளை வழங்கி இபோச இலச்சினையின் கீழ் நடத்துநர்கள் மற்றும் சாரதிகளை நியமித்து இந்த பஸ்களை இயக்கும்.

   iii. பஸ் உரிமையாளர்கள்/ பஸ் உரிமைக் கம்பனிகள், அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி கட்டணங்கள் மற்றும் எல்லா பராமரிப்பு செலவுகளையும் பஸ்/ பஸ்களை இயங்கும் வேளையில் செலுத்துதல் வேண்டும்.

   iv. வழங்கப்படும் பஸ்கள் மாக்கும்புற - கொழும்பு - கடவத்தை, மாக்கும்புற (அதிவேக நெடுங்சாலையூடாக) மற்றும் கடவத்தை - கொழும்பு - மாக்கும்புர - கடவத்தை (அதிவேக நெடுஞ்சாலையூடாக) இபோச நேரசூசியின் பிரகாரம் இயங்குதல் வேண்டும். ஒவ்வொரு பஸ்ஸும் மாதாந்தம் 6000 கி.மீ. இற்குள் மற்றும் மாதாந்தம் 22 நாட்கள் இயங்குதல் வேண்டும். ஏதேனும் காரணங்களால் இயக்கத்திற்காக ஒரு பஸ் வழங்க முடியாது போனால் வழங்குநரால் ஒரு மாற்றீடு பஸ் வழங்கப்படல் வேண்டும். இல்லாது விடின் குறித்த கால எல்லைக்கான விகிதாசாரத் தொகை சொல்லப்பட்ட பஸ்ஸின் மாதாந்த வாடகையிலிருந்து கழிக்கப்படும்

   v. மேற்படி சேவைக்காக 12 பஸ்கள் தேவைப்படுகின்றன. பயணிகள் கோரிக்கையின் அடிப்படையில் தேவைப்படும் போது மேற்படி பஸ் பாதைகளை மாற்றுவதற்கான உரிமையை இபோச கொண்டிருக்கும்.

   vi. ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் பஸ் உரிமையாளர்கள்/ பஸ் கம்பனிகளின் கட்டணங்கள் செலுத்தப்படும்.

   vii. வழங்கப்படும் பஸ்களுக்கான நிறுத்துமிட வசதிகளை அண்மையிலுள்ள டிப்போக்களில் இபோச வழங்கும்.

   viii. தேர்ந்தெடுக்கப்படும் பஸ் வழங்குநர் /வழங்குநர்கள் மற்றும் இபோச வுக்கு இடையில் 03 மாதங்களுக்கு பஸ்களை வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட ஓர் உடன்படிக்கை/ உடன்படிக்கைகளுக்கு உட்படுதல் வேண்டும். 03 மாத கால எல்லை முடிவடைந்த பின்னர் இபோச மற்றும் பஸ் வழங்குநர்கள் புதிய உடன்படிக்கை/ உடன்படிக்கைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

   ix. சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படுதல் ........... வரை செல்லுபடியாகும்.

   x. தேர்ந்தெடுக்கப்படின், விண்ணப்பதாரிகள் 24 மணிநேர அறிவித்தலில் இபோசவுக்கு குறித்த பஸ்களை வழங்குதல் வேண்டும்.

   ix. ஆர்வமுள்ள பஸ் உரிமையாளர்கள்/ பஸ் உரிமைக் கம்பனிகள் ......... முதல் ...... வரை இலவசமாக இபோச பெறுகைக்கு குழுவின் செயலாளரிடமிருந்து விலைமனுப் படிவங்களை சேகரிக்கலாம்.

3. கொழும்பு-05, கிருல வீதி, 200, இலங்கை போக்குவரத்து சபை, இபோச பெறுகைக் குழுத் தலைவருக்கு .............. அல்லது அதற்கு முன் மேற்படி விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் இயக்குவதற்கு நிறுத்திவைத்து சேவையில் ஈடுபடுத்தும் நகர பஸ் சேவைகளுக்கு மாதாந்த அடிப்படையில் இபோச வுக்கு வளிச் சீராக்கப்பட்ட பஸ்களை வழங்குவதற்கு விரும்பும் பஸ் உரிமையாளர்கள்/ பஸ் உரிமைக் கம்பனிகள் தமது விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

4. விலைமனுக்களை உள்ளடக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘நிறுத்திவைத்து சேவையில் ஈடுபடுத்தும் நகர பஸ் சேவைகளுக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் இபோச வுக்கு வளிச்சீராக்கப்பட்ட பஸ்களை வழங்குதல்’ என்று குறிப்பிடல் வேண்டும்.

5. கிடைக்கப் பெற்றுள்ள விலைமனுக்களில் இருந்து மிகவும் அனுகூலமான விலைமனு/ விலைமனுக்களை தேர்ந்தெடுக்கும் உரிமையை இபோச கொண்டிருக்கும்.

**தலைவர், இபோச பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்துச் சபை**
**இல. 200, கிருல வீதி,**
**கொழும்பு-05**

**விசாரணைகள்: செயலாளர், பெறுகைக் குழு**
**தொ.பே: 0117706110 மற்றும் 0771056110**
**தொ.பே/ பெக்ஸ்: 0112588457**

CSIAP — THE WORLD BANK

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

### செயற்றிட்ட இல.: P163742

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத்தலைவர் (தென் மாகாணம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலையின் விபரம் | CIDA பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | LK-MOA-293622-CW-RFB/SP/ DPDO/Rehb.T(9)/2022/09 | வீரவில அடுக்கையிலுள்ள திருவனாவெவயின் புனரமைப்பு வேலைகள் | C6 முதல் மேல் | 3000.00 | 290,000.00 | நவம்பர் 7ஆம் திகதி வரை |
| 2 | LK-MOA-293673-CW-RFB/SP/ DPDO/Rehb.T(26)/2022/10 | வீரவில அடுக்கையிலுள்ள முவன்வெவயின் புனரமைப்பு வேலைகள் | C6 முதல் மேல் | 3000.00 | 250,000.00 | |
| 3 | LK-MOA-267175-CW-RFB/SP/ DPDO/Rehb.T(29)/2022/11 | வீரவில அடுக்கையிலுள்ள உனதுவெவயின் புனரமைப்பு வேலைகள் | C6 முதல் மேல் | 3000.00 | 280,000.00 | |
| 4 | LK-MOA-293611-CW-RFB/SP/ DPDO/Rehb.T(43)/2022/12 | வீரவில அடுக்கையிலுள்ள கட்டாண்டிவெவயின் புனரமைப்பு வேலைகள் | C6 முதல் மேல் | 3000.00 | 300,000.00 | |
| 5 | LK-MOA-293623-CW-RFB/SP/ DPDO/Rehb.T(44)/2022/13 | வீரவில அடுக்கையிலுள்ள மைலவெவயின் புனரமைப்பு வேலைகள் | C7-C6 | 3000.00 | 150,000.00 | |
| 6 | LK-MOA-293610-CW-RFB/SP/ DPDO/Rehb.T(50)/2022/14 | வீரவில அடுக்கையிலுள்ள மதக்கதாரவெவயின் புனரமைப்பு வேலைகள் | C7-C6 | 3000.00 | 175,000.00 | |
| 7 | LK-MOA-293675-CW-RFB /SP/ DPDO/Rehb.T(67)/2022/17 | வீரவில அடுக்கையிலுள்ள நெலும்பொக்குண வெவயின் புனரமைப்பு வேலைகள் | C6 முதல் மேல் | 3000.00 | 215,000.00 | |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை ஹம்பாந்தோட்டை, நிர்வாகக் கட்டிடத்தொகுதி, 3ஆம் மாடி, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (தென் மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 047-2256304, தொலைநகல்: 047-2256303) மற்றும் அதே இடத்தில் 2022 ஜூன் 20ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு துறையில் மேற்குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்கள் நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

6. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) 2022 ஜூன் 20ஆம் திகதி முதல் 2022 ஜூலை 11ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்றும் மற்றும் வேலைத் தள விஜயமும் 2022 ஜூன் 30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தை தங்கள் சொந்த செலவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

8. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.

9. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு அதில் ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘நகல் பிரதி’’ எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.

11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஜூலை 11ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (தென் மாகாணம்), 3ஆம் தளம், நிர்வாகக் கட்டிடத்தொகுதி, ஹம்பாந்தோட்டை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

12. கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் 2022 ஜூலை 11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
